


# அமரர் உயர்திரு சு. பற்குணம்

(இளைப்பாறிய துணை அதிபர், இந்துக்கல்லூரி, கொழும்பு)

## நினைவு மலர்

SOUVENIER IN MEMORY OF

# Late Mr. S.PATKUNAM

*(Retired Vice Principal, Hindu College, Colombo)*

SLIPR

வெளியீடு
பழைய மாணவர் சங்கம்
இந்துக்கல்லூரி
கொழும்பு

*Published by*
The Old Boys' Association
**HINDU COLLEGE,**
Colombo

# சமர்ப்பணம்

02.06.1929 இல் அவதரித்து இந்துக்கல்லூரியில் ஆசிரியராகவும்,
துணையதிபராகவும் 23 ஆண்டுகள் சிறப்புறப் பணியாற்றி
21.06.1989 இல் இளைப்பாறி அதன் பின்னரும் பாடசாலை
அபிவிருத்திச் சபையின் துணைத் தலைவராகக்
கடமையாற்றி
09.07.1991 இல் மறைந்து எங்கள் குருவும்
என்றென்றும் எம் இதயங்களில்
நிறைந்தவருமாகிய

## அமரர் உயர்திரு. சு.பற்குணம்

அவர்களின் நினைவாக
இம்மலரினை வெளியிட்டு அன்னாருக்கு
அவர்களின் சீடர்களாகிய
நாங்கள் அஞ்சலி செலுத்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
**இந்துக் கல்லூரி**
கொழும்பு.

## DEDICATION

We, the students of the Late Mr. S.Patkunam, who was born on 2.7.1929 and served Hidu Colege for 23 years as teacher, Duputy Principal and Acting Principal till his retirement on 21.6.1989 and thereafter served as the Vice President of the School Development Society, dedicate this Souvenier to the memory of our Guru who always filled our hearts.

Old Boys ' Association
**HINDU COLLEGE**
Colombo.

உ
சிவமயம்

# சிவஸ்ரீ குருக்களின் பிரார்த்தனை

## "பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும் பெருகுமானத்துப் பிள்ளையைப் பேணுவாம்"

பருவமாய்ப் - பக்குவமாய்ப் - படிப்படியாய் பழுத்தல் - பூவாய் பிஞ்சாய் காயாகிப் பழுக்க வேண்டும். அதுவன்றிப் பிஞ்சிலே பழுத்தால் யாருக்குத் தான் பயன்! பிஞ்சிலே பழுக்காமல் - (பிஞ்சுக்காலம்) இளமையில் பாதுகாப்பு அவசியம், அதுவே பாடசாலைக்காலம், அக்காலத்தில் பக்குவமாகப் பண்பாக வளரல் வேண்டும். இப்படி எமது பிள்ளைகள் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் பக்குவமாகப் பண்பாக வளரப் பெற்றோர்போலப் பரதுகாத்த பெருமை பற்குண மாஸ்டருக்கே சிறப்பாக அமையும். அதுவன்றி திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும் உள்ளம் பருவமாப் பழுக்கவும் அருள் பாலிக்க எம் பிரான் பிள்ளையாரைப் பாடசாலையில் கோவில் கொள்ளச் செய்த பெருமையும் அவரின் விடா முயற்சியே.

நானும் எனது சுற்றத்தாரும் கல்விபயின்றதும் பயிலும் பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அல்லும் பகலும் சேவை புரிந்த பற்குணமாஸ்டர் எல்லார் உள்ளத்திலும் அழியாப்புகழ் கொண்டு விட்டார்.

அன்னார் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல மாணிக்கப் பிள்ளை யாரை வேண்டுகின்றேன்.

**சிவஸ்ரீ பா. சிற்சபேசக்குருக்கள்**
(மணி ஐயர்)
பிரதம குருக்கள்
சம்மாங் கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோவில்
கொழும்பு இந்துக் கல்லூரி வித்தக விநாயகர் ஆலயம்

# கொழும்பு மாவட்ட நாடாளுமன்றப் பிரதிநிதி
# மாண்புமிகு கைத்தொழில் இராஜாங்க அமைச்சரின்
# இரங்கற் செய்தி

பண்பும் அன்பும், பாரிய நட்பும் கொண்ட நண்பர் சு. பற்குணம் அவர்களைப் பலமுறை நேரில் சந்தித்து பாசத்துடன் பழகியிருக்கிறேன். வீரம், கல்வி, விழுமிய நோக்கம் கொண்ட பெருமகன் அவர். அவரிடம் குடிகொண்டிருந்த செல்வம் யாவும் கல்வி நலனே! பெரியார் பற்குணம் நம்மை விட்டு இப்போது பிரிந்து விட்டாலும், அன்னாருடைய அளப்பரிய தொண்டு மனோபாவம் நம்மிடையே இப்போதும் உலாவுகின்றது.

கொழும்பு இந்துக்கல்லூரியின் வளர்ச்சியில் அவர் எத்தகைய பங்கு வகித்தார் என்பதை அவருடைய பழைய மாணவர்கள் நினைவு கூருகின்றனர். பண்பிற்கோர் இலக்கணமாகப் பிரகாசித்த பெரியார் அவர். பண்டைய பண்பும் பயனும் நிறைந்த தொண்டு குலத்தில் தோன்றிய மகான் என்று நான் கூறினால் அது மிகைப்படுத்துவதாகாது. அந்த அளவுக்கு அவர் ஆற்றிய பெருந்தொண்டு எம்மை எங்கோ இட்டுச் செல்கின்றது. பரந்த பண்பு அவர் உள்ளத்தில் அருவியெனச் சொரியும்: நீரருவி போன்று நீக்கமற நின்றுலாவிய தருணத்தில் அன்னாரை பல முறை சந்தித்திருக்கிறேன். உண்மையில் அவர் பாரதி கண்ட தானங்களில் மிகச் சிறந்த பேரறிவாளர். ஆயிரம் சத்திரங்கள்; ஆயிரமாயிரம் கலைக் கூடங்கள், ஆனால் அவற்றையெல்லாம் விட ஒரு ஏழையின் கண்ணை அவனியில் திறக்க செய்யும் தானமே மிகப் பெரிது என்ற வகையில் பாரதி பாடினான். அந்தக் கவிதையை நனவில் வடித்த பெருமகன் பற்குணன் அவர்களுடைய ஆத்மா சாந்தி அடைந்து நமக்கெல்லாம் அருட்ஜோதியாக விளங்க வேண்டுமென்பதே எமது அவா.

அன்னாருடைய ஆத்மா குன்றின் மீதிட்ட தீபம் போல் பிரகாசிக்க மனமுவந்து அஞ்சலி செலுத்துகின்றோம்.

**எம். எஸ். செல்லச்சாமி**
கைத்தொழில் ராஜாங்க அமைச்சரும்
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்
பொதுச் செயலாளரும்

# மாண்புமிகு கல்வி இராஜாங்க அமைச்சரின் இரங்கற் செய்தி

"தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்ற வள்ளுவன் வாக்கிற்கு இணங்க ஒருவர் இவ்வுலகை விட்டு நீத்த பின்பு அவர் விட்டுச் சென்ற சேவைகளைக் கொண்டும் அவர் உலகுக்கு ஈந்த புத்திரர்களைக் கொண்டும் அவரால் உருவகக்கப்பட்ட மாணவர்களைக் கொண்டும் மதிப்பீடு செய்கின்றோம். இந்த அளவுகோலைக் கொண்டு காலஞ்சென்ற ஆசிரியர் அமரர் திரு. பற்குணம் அவர்களது சேவையை ஆராய்ந்தால் அவரது சேவை இவற்றையெல்லாம் செவ்வனே பூர்த்தி செய்தமையைக் காண முடிகின்றது.

அமரர் பற்குணம் அவர்கள் இந்துக் கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னும் அக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பெற்றோர், ஆசிரியர் ஆகியோரைச் சந்தித்து ஊக்கமும், ஆக்கமும், அளித்தார். இவர் பாடசாலையின் ஓர் அசையாத தூணாக விளங்கினார். இவர் ஓய்வு பெற்ற பின்பும் மாணவர்களுக்குப் பிரத்தியேக வகுப்புகள் நடாத்தி அவர்களை ஊக்கப் படுத்தினார்.

அமரர் பற்குணம் சில காலம் வாழ்ந்தால் இந்துக் கல்லூரி மேலும் நல்ல வளர்ச்சி பெற்றிருக்கும் என்பது எனது எண்ணம். அமரர் அவர்கள் வானுலகில் இருந்தாலும் அவரது நினைவு முழுவதும் இந்துக் கல்லூரியைப் பற்றியதாகவே இருக்கும், இந்துக் கல்லூரியை ஒரு தேசியப் பாடசாலையாக உருவாக்க நடவடிக்கை எடுத்தோம். அந்த நிலைமையை அவர் கண்டு களிக்க முன் இறைவன் அவரைத் தம்முடன் அழைத்துக் கொண்டார். எனினும் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அமரரது ஆசி எப்போதும் கிடைக்கும் என்பது எனது நம்பிக்கையாகும். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.


திருமதி. இராசமனோகரி புலந்திரன்
கல்வி இராஜாங்க அமைச்சர்

# Tribute from the Hon. Member of the Western Provincial Council

"He who lives in the hearts whom he leaves behind never dies." This is true of the late Mr. S. Patkunam.

The late Mr. S. Patkunam was a teacher by profession and he spent a major part of his service as a teacher at the Colombo Hindu College for almost 23 years from 1966 to 1989. He retired in 1989 having served last as its Deputy Principal.

The late Mr. S. Patkunam was a teacher of rare qualities. While devoting his working hours in teaching the students, he spent his leisure hour in the development activities of the College and social work. The progress the Colombo Hindu College has achieved was in no small measure due to his selfless service rendered during the tenure of his teaching career at the College.

The late Mr. Patkunam was an ardent member of the Hindu Citizens' Committee formed in 1987 and contributed his mite as such member to promote the interests of the Tamil Community.

His dedicated and tireless service as a teacher and social worker endeared him to one and all and this was amply proved when he was given a hero's unferal, on the 11th July 1991.

Men of the late Mr. Patkunam's calibre are rare, but the younger members of our community will do well to emulate him and serve the people in this hour of need.

My sympathies to his wife and son in this their hour of grief.

**E. N. Rajah Sinnathuray J.P.**
*Provincial Council Member*
*(Western Province)*

# பிரதி மாநகர முதல்வரின் அஞ்சலி

**நகர மண்டபம்**
கொழும்பு.
1991 யூலை 31

இந்து கலாசாரத்தைப் பேணவும் சமயநெறிவழி வாழவும் எங்கள் பிள்ளைகளுக்கு கல்வியறிவு புகட்ட எழுந்த இந்துக் கல்லூரி, கடந்த நாற்பது ஆண்டுகளாக அந்தப் பணியைச் செவ்வனே நிறைவேற்றி வந்துள்ளது.

அரசாங்கத்தை மட்டும் நம்பியிருக்காது நலன் விரும்பிகளின் ஆதரவுடன் பெற்றோர்கள் இப்பாடசாலையைக் கண்ணுங்கருத்துமாக வளர்த்து வந்திருக்கிறார்கள். அவ்வண்ணம் கொழும்பு இந்துக் கல்லூரி வளர்ச்சிபெற அயராது உழைத்த பெரியவர்களில் திரு. சு. பற்குணத்தை எல்லோரும் முன்னணியில் நிறுத்திப் போற்றுகின்றனர். ஏனெனில் அன்னார் தன் வாழ்வையே இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்து உழைத்ததுடன், மற்றவர்களையும் அப்பணியில் ஈடுபடவைத்து, பாடசாலை அபிவிருத்திச் சபை மூலம் பல திட்டங்களையும் நிறைவேற்றி, இந்துக் கல்லூரியை வளர்த்து வந்தார்.

இளைப்பாறிய பின்பும் கல்லூரியின் வளர்ச்சியிலேயே அவரின் கருத்து இருந்தது. தன்னலமற்ற சேவையால் எல்லோரின் உள்ளங்களையும் கொள்ளை கொண்ட ஒரு சேவையாளனை - தொண்டரை - வழிகாட்டியை கொழும்பு வாழ் தமிழ் மக்கள் இக்காலகட்டத்தில் இழந்தது மிகவும் துரதிஷ்டமே.

அமரர் பற்குணம் அவர்களின் சிறப்பை நினைவுகூர்ந்து அவரின் மாணவர்களான கல்லூரிப் பழையமாணவர் சங்கம் செலுத்தும் அஞ்சலியில் கொழும்பு மாநகர்வாழ் மக்களின் சார்பில் நானும் இணைந்து அவரின் மனைவியினதும் மகனினதும் துக்கத்தில் நாங்களும் பங்குகொண்டு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**க. கணேசலிங்கம்**
பிரதி மாநகர முதல்வர்,
கொழும்பு.

# TRIBUTE *from the Founders of Hindu College*

Hindu College, Colombo was established by Hindu Educational Society in order to educate Tamil Children in Colombo in a truly Hindu Atmosphere. This school was started as a Primary School under the name "Pillayar Padasalai" in February 1951.

That the "Pillayar Padasaial" from its small beginnings has, within a short span of 40 Years flowered into a giant Institution called the "Hindu College Colombo" is indeed a great achievement which would not have become possible but for the tireless and dedicated services rendered by men of the calibre of the late Mr. Patkunam.

The late Mr. Patkunam was a teacher and later the Deputy Principal of the Hindu College which he served with energy and enthusiasm for 23 long years, from 1966 to 1989. During those 23 years he played the part not only of an able and efficient teacher, but also of a dedicated frontline leader in developing the Institution. He participated in every activity of the College and endeavoured always to make it a success His concern for the progress of the Institution was so profound that he got his only son to study there throughout and bring name and fame to it by entering the Colombo Medical Faculty and graduating as a Doctor to serve the sick and the infirm.

I knew the late Mr. Patkunam also as a keen social worker. He was an ardent member of the Hindu Citizens' Committee formed in 1987 and extended his services to promote the interests of the Tamil community.

The late Mr. Patkunam was a man with high ideals and noble qualities, worthy of emulation by the younger members of our community.

I take this opportunity to extend my sympathies to the bereaved family of the late Mr. Patkunam on behalf of the founders of the Hindu College Colombo.

May his soul rest in Peace.

**V. Manicavasagar**
President
Hindu Educational Society

75, Lorenz Road,
Colombo 4.

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவரின்

# அஞ்சலி

இந்து மக்களின் உற்ற துணைவனாக—இந்துக் கல்லூரியின் நல்ல தலைவனாக—என்றும் எங்கள் சமுதாயத்தின் நலனிற்காகப் பணி புரியும் தொண்டனாகத் திகழ்ந்த என் அருமை நண்பன் திரு. சு. பற்குணம் அவர்களின் திடீர் மரணம் எங்களுக்கெல்லாம் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

வேதனைகளும் சோதனைகளும் எங்களை வாட்டுகின்ற வேளையில் நல்ல சமூகத் தொண்டர் ஒருவர் மறைந்தது மிகவும் துரதிர்ஷ்டமே.

வட கிழக்கிலிருந்து அகதிகளாக கொழும்பு வந்த தமிழ் மாணவர்களுக்குக் கைகொடுத்து உதவிய ஒரு பெருமகனை இன்று இழந்து விட்டோம்.

இந்து மாணவர்களுக்கென இந்து வித்தியாபிவிருத்திச் சங்கம் 40 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்த பிள்ளையார் பாடசாலை இன்று இந்துக் கல்லூரி என்ற பெயரில் வளர்ந்து பெரும் கல்விக்கூடமாக விளங்குகின்றது என்றால் அதற்குத் தன்னலமற்ற இந்துப் பெரியோர்கள் சிலர் செய்த தியாகமே காரணம். அச் சில பெரியோர்களில் அமரர் திரு. சு. பற்குணம் சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டியவர்.

திரு. பற்குணத்தின் மறைவு அவரின் குடும்பத்தை மட்டுமல்ல. இலங்கை வாழ் இந்துக்களையெல்லாம் ஆழாத் துயரில் ஆழ்த்தியிருக்கின்றது. அன்னாரின் குடும்பத்திற்கு அகில இலங்கை இந்து மன்றம் சார்பில் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டு, அமரர் திரு. பற்குணத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி

**வே. பாலசுப்பிரமணியம்**
தலைவர்
அகில இலங்கை இந்து மாமன்றம்

101/1, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு-2.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

# Message
from

*the Managing Trustee of*

## Sri Ponnampalavaneswarar Temple Thevasthanam

Mr. S. Patkunam was a Teacher of Colombo Hindu College who was Associated with the School from almost its inception. He has been closely associated with the growth of the School and rose to be the Vice Principal of the School. Several hundreds of students had the good fortune to pass through his hands. He was a dedicated teacher, who served his School in an exemplanary manner. His association with the School continued almost to the date of his untimely death, Not only was he closely connected with the Colombo Hindu College, but he was actively involved in the functioning of Ramanathan Hindu Girls School.

Mr. Patkunam was also a social worker. He served the community in various ways. Whenever, people were affected by violence Mr. Patkunam's services were freely available.

He was a source of strength and encouragement to those in distress.

It is therefore fitting that the Colombo Hindu College is releasing a souvenir in his memory.

**D. M. SWAMINATHAN**
*Managing Trustee*
*Sri Ponnampalavaneswarar*
*Thevasthanam and*
*President, Hindu Cultural*
*Foundation.*

125, Rosmed Place,
Colombo-7,
Sri Lanka.

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தானத்திலிருந்து
# சிவத்தமிழ்ச் செல்வியின் அஞ்சலி

## அமரர் பற்குணம் அவர்கள்
# ஒரு சஞ்சீவி

''உலகத்தினின்று நீ ஏற்பது குறைவாகவும் உலகத்துக்கு நீ வழங்குவது அதிகமாக வும் இருக்கட்டும்.'' என்பது சுவாமி சிவானந்தருடைய வாக்கு. இவ்வாக்கை தனது வாழ் நாளில் நிறைவேற்றியவர் அமரர் சுப்பிரமணியம் பற்குணம் அவர்கள். இவர் ஆசிரியத் தொழிலில் ஆத்மீகங் கண்டவர், பிறவியிலேயே ஒரு முழுமையான மனிதனுக வாழக் கூடிய தகுதிகள் அத்தனையையும் பெற்றவர். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை, என்ற ஐந்தையும் சால்பாகக் கொண்டவர். இதனுல் இவர் சான்ருேர் வரிசையில் வைத்து எண்ணப்படத்தக்க மகிமை உடையவர், இத்தகைய பெரியார் அவர்களுடைய இழப்பு என்னை பெருந் திகிலுக்குள் அழுத்திவிட்டது.

அன்று 10-7-81 புதன்கிழமை காலை திடீரென வானெலியின் மூலம் இவர் மறைந்து விட்டார் என்ற செய்தி காதிலே விழுந்தது. ஒரு கணம் இது உண்மைதானு என்று திகைப் படைந்தேன். ஆனுல் மறுநாள் அவரின் உறவினர்களின் மூலம் அது உண்மைச் செய்தி என்பதைத் தெரிந்து கொண்டு அவரது ஒரே ஒரு சகோதரியின் இல்லத்துக்குச் சென்று அங்கு நடைபெற்ற இரங்கல் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டேன். ஒரு சொட்டுக் கண்ணீர் அவர் சேவையை நினைந்து விட்டதோடு என்னுடைய கடமையை நிறைவேற்றிவிட முடி யாது. ஆகவே இந்த இரங்கற் செய்தியை அவரது மனைவிக்கும், மகனுக்கும் அனுப்பி வைப்பது எனது தலையாய கடமையாகும். நாட்டிலே ஊரடங்கு; போக்கு வரத்து வசதிகள் அற்ற நேரம்; தொலைத் தொடர்புச் சாதனங்கள் எதுவுமில்லை; இத்தனை நெருக்கடிக்குள்ளும் யாழ்ப்பாணத்தில் வாழுகின்ற மக்கள் ஏதோ திருவருளின் துணைகொண்டு இன்னும் தமது கடமைகளை நிறைவேற்றிக் கொண்டு இருக்கிருர்கள் என்ருல் அவர்களின் மன உறுதியைத் தான் மெச்சவேண்டும். இது ஒரு புறம் இருக்கட்டும்.

அமரர் பற்குணம் அவர்கள் கொழும்பு இந்துக் கல்லூரியை மேலோங்கச் செய்த ஒரு புண்ணியவான். இதனுல் அக்கல்லூரியின் அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற் ருேர்கள் ஆகியோரது உள்ளத்தில் நிலையான இடத்தைப் பெற்று விட்டார். இவர் கல்வி உலகில் ஒரு அணையா விளக்கு. கல்லூரிகளும் கடவுள் ஆலயங்களும் இணைய வேண்டும். என்ற கொள்கை இவர் உள்ளத்தில் வேரூன்றி இருந்தமையினுல் அங்கு ஒரு பிள்ளையார் கோயில் அமைத்து குடமுழுக்குக் கண்டு இறும்பூது கொண்டார். பாடசாலைகளிலே பக்தியை யும், அறிவையும், பண்பாட்டு நெறியையும் ஒன்ருக வளர்க்க வேண்டும் என்பது தான் கல்லூரிகளின் புனிதநோக்கமாக அமைய வேண்டும். இதனை கொழும்பு இந்துக் கல்லூரி கடந்த பல காலமாக நிறை வேற்றி வருகிறது. பல தடவைகளில் நான் அங்கு சென்று உரையாற்றிய சந்தர்ப்பங்கள் அனைத்துக்கும் பற்குணம் ஆசிரியருடைய அன்பு அழைப்பே காரணமாகும். இன்றைக்கு அவர் அங்கு இல்லை என்று நினைக்கும் போது எனது உள்ளம் வெடித்துவிடும் போல் இருக்கிறது. என்ன செய்வோம்; பிறந்தவர்கள் அனைவரும் இறந்து விடுவார்கள் என்பது நிச்சயம் ''நாங்களனைவரும் தூக்குத்தண்டனைக்கு உள்ளாக் கப் பட்டவர்கள். நிறைவேற்றப்படும் திகதியிலேதான் வித்தியாசம்'' இது ஒரு அறிஞ ருடைய கூற்று. மறைந்தவர்களை நினைந்து மறையப் போகிறவர்கள் வருந்துவது இயற்கை தான் எனவே அமரர் அவர்களுடைய மறைவை ஒட்டி எமது அஞ்சலியைச் செலுத்தி அவருடைய மனைவியாருக்கும், மகனுக்கும் அனுதாபம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**

# வளர்ச்சிப் பாதையில் இந்துக் கல்லூரி

(இந்துக் கல்லூரியின் சரித்திர நாயகன் அமரர் பற்குணம் மாஸ்டர் இந்துக் கல்லூரியின் சரித்திரத்தை இளைப்பாறிய கட்டத்தில் எடுத்துரைத்திருந்தார். 9-2-1990 அன்று வீரகேசரி விசேட அநுபந்தத்தில் இக்கட்டுரை பிரசுரமாகியிருந்தது.)

கொழும்பு மாநகரில் வாழும் சைவத் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வித் தேவைகளை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்ற நன்னோக்கத்தோடு இந்து வித்தியாபி விருத்திச் சபையினர் 1951-ஆம் ஆண்டு பிள்ளையார் பாடசாலை என்ற பெயரோடு இக் கல்லூரியை ஆரம்பித்தனர். எந்த நோக்கத்திற்காக பிள்ளையார் பாடசாலையை ஆரம்பித்தார்களோ அந்த நோக்கம் இன்று நிறைவேறி வருவதைக் கண்டு இந்து வித்தியாபி விருத்திச் சபையினர் பெருமையும் மனநிறைவும் அடைகின்றனர்.

ஒரு பாடசாலை வளர்ச்சியடைய வேண்டுமானால் அதிபர், ஆசிரியர், பாடசாலை அபிவிருத்திச் சபையினர், பழைய மாணவ சங்கத்தினர் ஆகியோரது ஒருமித்த செயற்பாடே முக்கிய காரணம் என்பதை இந்துக் கல்லூரி வரலாற்றில் இருந்து நாம் காணக் கூடியதாக இருக்கிறது.

இக் கல்லூரியில் காலத்துக்கு காலம் கடமையாற்றிய அதிபர்கள் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திச் சபையினர் பழைய மாணவ சங்கத்தினர் ஆகியோரது அயராத உழைப்பே இன்றைய இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

1966 ஆம் ஆண்டு வரை இரத்மலானை இந்துக் கல்லூரியின் ஓர் அங்கமாக இருந்து வந்த பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி 1967 ஆம் ஆண்டு தனித்தியங்க ஆரம்பித்தது அப்போது திரு. பொ. நல்லையா அவர்கள் அதிபராகப் பதவியேற்றார். அன்றிலிருந்து இந்துக் கல்லூரியின் பொற்காலம் ஆரம்பமானது.

திரு. பொ. நல்லையா அவர்களதும், ஆசிரியர்களதும், பாடசாலை அபிவிருத்திச் சபையினரதும், பழையமாணவ சங்கத்தினரதும் அயராத உழைப்பாலும் செயற் பாட்டாலும் குறுகிய காலத்தில் இந்துக் கல்லூரி துரித வளர்ச்சியை அடைந்தது.

முதலாவது மூன்று மாடிக் கட்டிடம் திரு. பொ. நல்லையா அவர்களின் காலத்தில் நிறுவப்பட்டு அதிகரித்து வந்த மாணவரின் இடத்தேவையைப் பூர்த்தி செய்தது.

திரு. பொ. நல்லையா அவர்கள் ஓய்வு பெற திரு. த. சங்கரலிங்கம் அவர்கள் 1970-ஆம் ஆண்டு அதிபர் பதவியை ஏற்றார். இவரது காலத்தில் 4 மூன்று மாடிக்கட்டிடங்கள் ஆராதனை மண்டபம், நிருவாகக் கட்டிடம், நவீன வசதிகள் கொண்ட ஆய்வு கூடங்கள் வாசிகசாலை, வேலைத்தளம் ஆகியன அமைக்கப்பட்டன.

அத்துடன் பரந்த விளையாட்டு மைதானத்திற்கான காணியும் கிடைத்ததோடு பார்வையாளர் அரங்கிற்கான அத்திவாரமும் இடப்பட்டது.

இவை யாவற்றையும் காலத்திற்குக் காலம் உருவாக்கிவைத்த பெருமை பாடசாலை அபிவிருத்திச் சபையினரையும் பழைய மாணவ சங்கத்தினரையுமே சாரும்.

1983-ஆம் ஆண்டு யூலை மாதம் கிட்டத்தட்ட இரண்டாயிரத்து இருநூறு மாணவரும் எழுபது ஆசிரியர்களும் இந்துக் கல்லூரியில் இருந்தனர். ஐம்பது வகுப்பறைகளில் மாணவர் கல்விபயின்றனர், இக்காலம் இந்துக் கல்லூரியின் வரலாற்றில் உச்சக் காலமாகும்.

இவ்வளர்ச்சியைப் பொறுக்க முடியாமற் போலும் 1983-ஆம் ஆண்டு யூலை மாதம் இனக்கலவரம் ஏற்பட்டது. இதனால் ஆசிரியர்களும், மாணவரும், பெற்றோரும் கொழும்பை விட்டு இலங்கையின் நாலா பக்கங்களுக்கும் சென்றனர். இதனால் இந்துக் கல்லூரி பெரும் பாதிப்படைந்தது.

இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தங்களை அர்ப்பணித்த பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர் பலரும் இந்த நாட்டை விட்டு வெளிநாடு சென்றனர்.

கல்லூரியின் தேவைகளுக்கு வாரி வழங்கிய கொடை வள்ளல்கள் பிற இடங்களுக்குச் சென்றார்கள். விவேகமும், திறமையும் கொண்ட மாணவர்கள் தூர இடங்களிலுள்ள பாட சாலைகளுக்குச் சென்றனர். கல்லூரியின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் உயர்ச்சிக்கும் தங்களை அர்ப்பணித்த ஆசிரியப் பெருமக்கள் பலர் ஓய்வு பெற்றும், சிலர் வேறு இடங் களுக்கு மாற்றலாகியும் சென்றனர். இதனால் இந்துக் கல்லூரிக்கு ஈடுசெய்ய முடியாத பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் 1984-ஆம் ஆண்டு தை மாதம் பாடசாலை ஆரம்பமான போது முன் னூறு மாணவர் வரையில் வருகை தந்தனர், இந்துக் கல்லூரியை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமென்ற அவாக் கொண்டு அதிபர். ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை யினர். பழைய மாணவர் சங்கத்தினர் ஆகிய அனைவரும் இடைவிடாது முயன்றனர். மாணவர் வரவு நாளுக்குநாள் அதிகரித்து வந்தது. இந்நிலையில் 1986-ஆம் ஆண்டு ஜன வரி மாதம் திரு. டி. ஆர். இராஜலிங்கம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இன்று ஏறக்குறைய 1800 மாணவர்கள் வரை கல்வி கற்கின்றனர். 60 ஆசிரியர்கள் வரை கடமை யாற்றுகின்றனர்.

மாணவர்கள் சமய அடிப்படையில் இறைபக்தியோடு கல்வி கற்க வேண்டுமென்ற பெருநோக்குடன் கல்லூரி முன்றலில் வித்தக விநாயகர் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

காலையில் பாடசாலைக்கு வரும்போதும் பாடசாலை விட்டுப் போகும் போதும் மாணவர்கள் வித்தக விநாயகரை வணங்கிச் செல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கின்றது.

விக்கினங்களைத் தீர்த்தருளும் விநாயகப் பெருமான் கல்லூரிக்கும் மாணவர்களுக்கும் எவ்வித விக்கினங்களையும் வரவிட மாட்டார் என்ற நம்பிக்கை எல்லோர் உள்ளங்களிலும் பதிந்திருக்கிறது.

இந்துக் கல்லூரி மாணவர்கள் கடந்த காலத்தில் விளையாட்டுத் துறையில் சாதனை கள் பலவற்றை நிலை நாட்டியுள்ளனர். கொழும்பில் தலை சிறந்த கல்லூரிகளோடு ஹொக்கி, உதை பந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டியதன் மூலம் இந்துக் கல்லூரிக்கு பெரும் புகழைப் பெற்றுக் கொடுத்து உள்ளனர். இம்மாணவர்களுக் கான சகல பயிற்சிகளையும் பழைய மாணவ சங்கத்தினர் அளித்து வருகின்றனர்.

ஐந்து இலட்சம் ரூபா செலவில் அழகுற அமைக்கப்பட்ட பார்வையாளர் அரங்கும் பரந்த விளையாட்டு மைதானமும் இருந்தும் சிறந்த முறையில் பயிற்சி பெறக் கூடிய வகை யில் மைதான அமைப்பு இல்லாததினால் மாணவர்கள் தங்கள் ஆற்றலையும் திறமையையும்

வெளிக்காட்ட முடியாதிருக்கின்றனர். இந்நிலையைப் போக்க பழைய மாணவ சங்கத்தின ரும் பாடசாலை அபிவிருத்திச் சபையினரும் ஐந்து லட்சம் ரூபா செலவில் விளையாட்டு மைதானத்தை புனரமைக்கத் திட்டம் வகுத்துள்ளனர்.

இத்திட்டத்தினை நிறைவேற்றி வைப்பது இந்துக் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை யுள்ள தமிழ் பெருமக்கள் அனைவரினதும் தலையாய கடமையாகும்

பொதுப் பரீட்சைகளிலும் கலை நிகழ்ச்சிகளிலும் மாணவர்கள் ஈட்டிவரும் சாதனை கள் ஆசிரியப் பெருமக்களின் கற்பித்தல் திறமைக்கும் அதிபரது வழி நடத்தலுக்கும் எடுத் துக் காட்டாக அமைகின்றன. இவர்களது தன்னலம் கருதாச் சேவையை தமிழ் பெருமக் கள் என்றும் பாராட்டி வருகிறார்கள்.

இந்துக் கல்லூரி தமிழ் மாணவரின் கல்வித் தேவைகளை நிறைவேற்றுவதோடு மட் டும் நிற்கவில்லை. காலத்துக்குக் காலம் தமிழ் மக்கள் தாக்கப்படும்போது அகதிகள் முகா மாகவும் அவர்களின் பாதுகாப்பு அரணாகவும் இருந்து வருகின்றது. எனவே இந்துக் கல்லூரி தமிழ் மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருக்கிறது.

தமிழ் மக்களின் தனிச் சொத்தான இந்துக் கல்லூரியின் தனித்துவத்தையும் பாரம் பரியத்தையும் தொடர்ந்தும் பேணிக் காப்பதோடு அதன் தேவைகளை நிறைவேற்ற பாட சாலை அபிவிருத்திச் சபையினரும் பழைய மாணவ சங்கத்தினரும் எடுக்கும் நன் முயற்சி களுக்கு பேராதரவு வழங்கி. ஊக்கம் அளிக்க வேண்டியது தமிழ் மக்களின் நீங்காக் கடமையாகும்.

''இந்துக் கல்லூரி எங்கள் கல்லூரி'' என்ற தாரக மந்திரம் ஒவ்வொரு தமிழ் மகனது உள்ளத்திலும் நிலை கொண்டிருக்க வேண்டும்.

**வழங்குக நல்லாதரவு**
**வளர்க இந்துக் கல்லூரி**

**சு. பற்குணம்**

# *Tribute* from

## the Retired Principal Hindu College

The sudden passing away of late Mr. Patkunam came as a terrible blow to his family, relations and friends. To those of us who worked closely with him there was never any question of his health or vigour. His passing at this stage has left a deep void which will be hard to fill in his family circle but also in a wide range of other activities in Hindu College and other organisations. His concerns to the College cannot be expressed. The growth of Colombo Hindu College which the present generation knows and Mr. Patkunam is one of the prime builders.

Mr. Patkunam with his charming smile and gentlemanly ways made plenty of friends. His willingness to help everybody at school as well as outside enabled him to get on well with the people. His friendly approach in dealing with major issues at school and ability to solve problems were major characteristics. His religious belief, cultural activities and the day to day work in school are unforgettable. He made his presence and contributions in our school meetings in cheerful and constructive ways.

My association with him is nearly twenty-five years. We have lost an examplary son of the country. He was right throughout appeared to be in pink health, active, energetic and cheerful.

These made us never to believe about his sudden death. A loss we can never take up.

Mr. Patkunam was always willing, helpful capable, lively, humble and approachable by any one. His excellent manner in dealing with problems made plenty of friends.

Mr. Patkunam was a gentleman of high qualities always ready to help anyone irrespective of caste, creed, religion or ethnic group. Due to his hard work and valuable services he was the Vice Principal of Hindu College for a very long time.

It is a very sad state of affairs to us to see his wife and only son who is a doctor passed out recently missing him.

Oh Lord Almighty, please take him in your hands. May his soul rest in peace.

**T. SANGARALINGEM**
Former Principal
Hindu College Colombo.

121A, Hambrough Road,
Southall
Middlesex
U.K.

# We Salute Our Guru

## A Tribute to our Guru _the Late Mr S. Patkunam

"Oh Death! Will not death overtake you one day"– so lamented the Tamil poet, the late Mr Kannathason on the occasion of the death of the late Pandit Jawaharlal Nehru. Our lament is no less on the death of our Guru and Guide, the late Mr. S. Patkunam.

Our pleasant memories of him will make us exclaim always: "Greatness, thy name is Patkunam". His greatness lay as much in the profuse care and concern he showed towards his students as in the immense interest he took in the development and progress of the Colombo Hindu College in particular and the Tamil community in general. He was a dedicated teacher, an enthusiastic social worker and above all an amiable friend and a willing guide to one and all, rolled into one. He was a rare personality.

We came to know of him first as a teacher. His teaching prowess religious bent of mind and humane qualities endeared us to him and he soon became our leader and we his ardent followers. The result was alround progress for the students and the spectacular development of the College itself.

He was a tower of strength both to the students and the College and his success was in involving himself and the students along with the School Development Society in a spirit of co-operation in every school activity and aspect of school development. These efforts of his saw the College growing from strength to strength and becoming the boast and pride of all of us, including the old boys.

His final event at the College was the meeting with the new Principal where members of the School Development Society and the Old Boys' Association were present. He wished the SDS and OBA to work together for the up iftment of the College and to give the Principal and staff every assistance for them to discharge their functions willingly and efficiently.

We cannot pay any better homage to him than emulating his life and work and continuing with greater zeal his services to the College.

No moment is more opportune than this to appeal to all our old boys to become members of the OBA and carry through his work

Oh, our Guru! We all salute you from afar and promise you that your ideals will be followed and work continued by us with the same spirit and fervour that enthused you to do so.

**OLD BOYS' ASSOCIATION**
Hindu College
Colombo-

எமது கல்லூரி அதிபரின்

# இரங்கற் செய்தி

அமரர் எசு. பற்குணம் அவர்கள் எமது கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு தன்னலங் கருதாது தொண்டாற்றிய பெருமகன் ஆவார். அன்னாரது அளப்பரிய சேவை எமது கல்லூரி வரலாற்றில் நிரந்தர இடம் பெறத்தக்கது. அமரர் பற்குணம் நல்லாசிரியனுக, பொறுப்புமிக்க உப-அதிபராக, கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்த பதில்-அதிபராக கடமையாற்றி எமது கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்தவர் எனத் குறிப்பிடுவதில் பெருமையடைகின்றேன்.

தலைநகரில் உள்ள ஏனைய கல்லூரிகளின் தரத்திற்கு எமது கல்லூரியும் உயர்ச்சி பெற வேண்டும் என்ற உயர் இலட்சியத்தினைக் கொண்டு செயலாற்றியவர்; தன்னேடு இணைந்து சேவைபுரிந்த சக ஆசிரியர்களினதும் இக் கல்லூரியின் இளந்தலைமுறையினரதும் நலனில் கண்ணுங் கருத்துமாக இருந்து அக்கறையுடன் சேவை புரிந்த கடமை வீரன் ஆவார். ''கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே'' என்ற கீதோபதேசத்திற்குச் சிறந்த உதாரண புருஷராக விளங்கியவர் அமரர் பற்குணம் அவர்கள்.

எமது கல்லூரி மீது அவர் கொண்ட அளப்பரிய மதிப்பினுலும் அன்பினுலும் பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின்னருங் கூட கல்லூரியின் வளர்ச்சிக்கான செயற்பாடுகளில் பல்வேறு வழிகளில் பெரும் பங்கு கொண்டு தொண்டாற்றினுர். யாவற்றுக்கும் மேலாக எம் தலைமுறையினருக்கு ஒரு சிறந்த குருவாக விளங்கிய பெருமை அவருக்குண்டு. பல்துறைகளிலும் பணிபுரியும் இக்கல்லூரியின் பழைய மாணவர்களுக்கு அவர் காட்டிய அன்பினுலும் வழி காட்டினுலும் அவர்களது உள்ளங்களில் நிறைந்து விளங்கியவர். இவரது ஆசிரிய வாழ்க்கை எமக்கெல்லாம் நல்லதொரு எடுத்துக் காட்டு.

அன்னுரது மறைவுக்குப்பின் ஆத்ம சாந்திக்காக நடைபெறும் முப்பத்தோராம் நாள் நிகழ்ச்சியை முன்னிட்டு வெளிவரும் இந் நினைவு மலர் அவரது கடந்த கால ஆசிரிய வாழ்க்கையை எமது எதிர்காலச் சந்ததியினருக்கு காலந்தோறும் நினைவூட்டும் சின்னமாக அமைவதாகுக!

அன்னுரது மறைவு எமக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். கல்லூரியின் வளர்ச்சிப் போக்கில் சிறப்பாக இக்கட்டான காலங்களில் அன்னுர் ஆற்றிய சேவை எம் அனைவராலும் நினைவு கூரப் படத்தக்கவையாகும்.

அன்னுரின் ஆத்மா சாந்தி யடைவதாகுக !

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பா. சி. சர்மா**
அதிபர்

இந்துக் கல்லூரி,
கொழும்பு-4.
31-7-1991

கொழும்பு விவேகானந்த சபையின் அஞ்சலி

# நீணெறிச் செல்வன் பற்குணம்

புகழொடு விளங்கிப் பூத்த செம்மல் திரு. சு. பற்குணம் அவர்கள் அறிந்தோர் அண்டினோர் அனைவரையும் ஆருத்துயருள் அமிழ்த்தி 9-7-1991ல் அமரத்துவம் எய்தினர். பற்குணம் அவர்களால் ஆக்கமெய்திய அன்னாரின் பழையமாணவர், செய் நன்றி நினைந்து உய்தி நோக்குடன், நினைவு மலர் ஒன்றினை வெளியிட முன்வந்தமை, அவர் தம்மாண வரை ஈர்த்து ஈர்த்து என்புருக்கிக் கரும்பு தருசுவை இன்சொல் ஈந்தமையைக் காட்டுவதாக அமைகின்றது.

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

உள்ளத்தால் பொய்யா தொழுகி வெள்ளத்தனைய மாந்தர் பலரின் உள்ளத்துளெல் லாஞ் சுடர்விடு சோதியாய் இன்றுளார் பற்குணம்

அமரர் பற்குணம் அவர்களை அறியத்தக்க வாய்ப்பு எனக்குக். கிடைத்தமை தவப்பயனே, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் என் மழலைகள் ஐவர் கற்றதன் பயனும், இருவரும் பாடசாலை அபிவிருத்திச் சபையில் இருதசாப்தங்களாக இணைந்து செயலாற்றியமையால் இப் பண்புடையாளர் தொடர்பைப் பயின்று இன்புற்றேன். நண்பனாய் இணைந்து ஈற்றில் எனக்கே நல்லாசிரியனாய் இணைந்த பெருந்தகை. மாணவர் உலகின் நலன் வேண்டி அவர்தம் பெற்றோருடன் உரைநாடி பின்னர் கொழும்புவாழ் சைவத் தமிழரின் உள்ளங்களைக் கவர்ந்து நிலையான அன்பைப் பெற்ற பெற்றியை இப் பொற்குணனைச் சேர்ந்தது.

பாடசாலை அபிவிருத்திக்கு எங்கெங்கு சென்று நிதிவசூலிக்க முயன்றோமோ அங் கெலாம் தென்றல் வரத் திருந்துந் தளிர் காட்டுந் தேமாவே போன்று பற்குணத்தின் வர வால் நகைமுகமும் உவகையும் கொண்ட பெற்றோரையும் நலம் விரும்பிகளையுமே காண முடிந்தது

கொழும்பில் இனக்கலவரம் ஏற்பட்ட போதெல்லாம் அகதிகள் முகாங்களில் அரியசேவை செய்து துயர்துடைத்த செம்மல் "சிற்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப் படூஉம்" என்ற கோவூர் கிழார் மொழியை இவரின் செயலிற் கண்டனம். இத்தகை சிலரின் செயலாற்றான் உலகம் வாழ்கின்றது.

"சேற்றுவளர் தாமரை பயந்த ஒண்கேழ்
நூற்றிதழ் அலரின் நிறைகண் டன்ன
வேற்றுமை இல்லா விழுத்தினைப் பிறந்து
வீற்றிருந் தோரை எண்ணுங் காலை
உரையும் பாட்டும் உடையோர் சிலரே
மரைஇலை போல மாய்ந்தசினோர் பலரே
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி"

கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன் கண் நிற்றலுங் கூடப்பெற்ற பெற்றியர் பற்குணம் வல்லார் ஆயினும் வல்லூர் ஆயினும் வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி அருள் சுரக்கும் நெறிபுடைச் சிலருள் பற்குணமும் உறுவரால் தன்னையடைந்தார் வினைதீர்பதன்றோ தலையாயவர் கடனவது'தான் என்ற அப்பர் வாக்குள் அமைவுற்றுத் தலைவராகச் சமுகமேற்குந் தகமை பெற்றவர்.

'' அழல் மண்டு போழ்தின் அடைந்தவர்கட்கு எல்லாம்
நிழல் மரம்போல் நேரொப்பத் தாங்கிப்—பழுமரம்போல்
பல்லார் பயன்துய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்''

என்றுங்கு மெய்வருத்தம் பாராதும் கண்துஞ்சாதும் பசிநோக்காதும் ஒப்படைக்கப்பட்ட கருமத்தை நிறைவேற்றும் உறுதிபடைத்தவர். எத்தனையோருக்கு வேலைவாய்ப்புத் தேடிக் கொடுத்தும்வர், பல மணவினைகள் நிறைவுற உழைத்தவர். துன்பத் துயரங்களுள் ஆறுதல் கொடுத்தும் பல மரணச் சடங்குகளில் வேண்டப்பட்ட உதவியும் நிறுவியவர். தன்னடைந் தார்கட்கு இன்பந்தருமித் தத்துவனை எத்தனை உள்ளங்கள் வாழ்ந்து வாழ்த்துகின்றன.

மயாயவில் பிறந்து தாய்தந்தை ஊராகிய மல்லாகத்தில் வளர்ந்தவர். இளமையில் பெற் றோரை இழந்தபோதும் உள்ள உறுதியோடு தம்முடன் பிறந்த தனிச் சகோதரியுடன் பாசத்துள் வளர்ந்து தானுஞ் சகோதரியும் மேம்பாடுற உழைத்தவர்.

'' ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர் ''

ஆரவற்ற நிலையில் தானுந் தன்சகோதரியும் இளமையில் ஒருவர்க்கொருவர் உறுதுணை யாய் இருந்தமை இறக்கும் வரையும் இவருக்கு அவவிற்குக் கடமைப்பாடு உண்டென்று செயலாற்ற உந்தியது. பெற்றது பெருநிதியம் என்ற திருப்தியுடன் உற்றவர்க்கு உதவிக் கட்டுப்பாடுடன் வாழ்ந்து

'' கற்றுங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பற்றது கொண்டு மனந்திருத்திப் — பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றென்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச் சென்றார் ''

என்யதற்கு இலக்கணமாகத் தம்மை நெறிப்படுத்திய செம்மல் பற்குணம் ''நெகுதற் கொத்த நெஞ்சும் நேயத்தாலே யாவி உகுதற் கொத்த உடலும்'' உடையாராய் கண்டோர் வியக்கும் பண்பின இவர்பாற் காணுதாரிலர் என்றே கூறலாம்.

பொதுக் கருமங்கள் எவற்றைச் செய்யினும் மற்றவர்களுடன் கலந்தாலோசித்த பின்னர் அவரையும் இணைத்துச் செயலில் இறங்குவர்.

'' அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன் அறிந்து தேர்ந்து கொளல்''

என்ற வள்ளுவர் கூற்றுக்கிணங்கத் தம்மை வழிநடத்தியவர். தெரிந்த இனந்தொடு தேர்ந் தெண்ணிக் ''கருமம் இயற்றுவதால் அரும்பொருள் யாதொன்றும் இல்லா'' நிலையில் கருமகங்ள் கைகூடின. எல்லோர் நன்மதிப்பும் உதவியும் இதனால் இவரைச் சென்றடைந்தன.

1983ல் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரில் அதிபரற்ற நிலை தோன்றியது. அப்பொழுது பெற் றார் ஆசிரியர் நலன் விரும்பிகள் அனைவருந் திரு பற்குணம் அவர்களைத் தலைமைப் பீடத்திற்குத் தகுந்தவர் என மதிப்பீடு செய்து அவரை அதிபராகப் பதவியேற்கும் வண்ணம் வேண்டினர். பதவியாசை உடையவரெனின் அப்பதவியை நழுவவிடாது ஏற்க முனைவர். பற்குணமோ வேறொரு அதிபரைத் தேருங்காலம் வரை தாம் பதிலதிபராகவே கடமையாற்ற விரும்பினர். தகுந்த அதிபர் எனத் தானறிந்த ஒருவரை சிபார்சு செய்து அவரை ஏற்கும்படியும் வேண்டினர் .

'' பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல் ''

தன்னலங் கருதாது உழைக்குந் தகைமை சால் நல்லோனுய் தன்னைக் காட்டிக்கொண்டார் பற்குணம். தான் பதில் அதிபராய் கடமையாற்றிய இடத்தில் தன்சிபார்சில் வந்த அதிபருக்குப் பணிந்து புதிய அதிபரின் அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்து திருந்திய நெறியைப் புலப்படுத்தியவர் பற்குணம்.

" பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து"

" பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்"

தீர்ந்த அன்பாய அன்பருக்கு அவரினும் அன்பராய் வாழ்ந்து சாட்டிய பெருந்தகை திரு பற்குணம்.

" உண்டால் அம்ம, இவ்வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின், உயிருங் கொடுக்குவர், பழியெனின்
உலகுடன் பெறினும், கொள்ளலர்; அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே "

நண்பராய் வாழ்ந்தோருடன் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டகால் மற்றவர் பிழை புரிந்த வேளையிலும் தன் பிழையேபோல் மனந் நொந்துள்ளமை என்போன்ருர் மாட்டும் ஏனைப் பலர்மாட்டு நிகழ்ந்தமை என்றும் என் நினைவுள் நிலவுவன,

" நின்யான் பிழைத்தது நோவாய்; என்னினும்
நீ பிழைத் தாய்போல் நனிநா ணினையே "

என்ருங்கு தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்குஞ் செம்மல் எம்மத்தியில் இத்தகை ஒருவர் வாழ்ந்தார் என்று நினைக்க வொண்ணு நீணெறிச் செல்வன் பற்குணம். சொல்லின் செயல் நிற்றல், ஆசிரியர் தம்மாணவரை ஆற்றுப்படுத்தும் தூநெறியன்ருே!

" சொல்லுதல் யார்க்கும் எளிய, அரிய ஆம்
சொல்லிய வண்ணம் செயல் " — குறள்

" மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாயந் தனரே " — புறநானூறு

" பொன்றுத லொருகா லத்தும் தவிருமோ பொதுமைத் தன்ருே
இன்றுளார் நாளை மாள்வர் புகழுக்கு மிறுதி யுண்டோ" — கம்பர்

" ஒன்ரு உலகத்துயர்ந்த புகழ் அல்லால்
பொன்ருது நிற்ப தொன்றில் " — குறள்

டாக்டர் க. வேலாயுதபிள்ளை
தலைவர் கொழும்பு விவேகானந்த சபை

34, விவேகானந்த மேடு,
கொழும்பு-13.
8-7-1991

# பற்குணம் மாஸ்டரின் ஆத்மா சாந்தியடைய இந்துக் கல்லூரியை மேலும் வளர்த்திடுவோம்

## பாடசாலை அபிவிருத்திச் சபையின் அஞ்சலி

இந்துக்கல்லூரியின் வளர்ச்சியே தன் வாழ்வின் இலட்சியமாக வாழ்ந்த உத்தமர்-கொழும்பு நகர்தனில் தமிழ்மணம் வீசி இந்துகலாசாரம் பேணி நிற்கும் கலைக்கூடத்தை கண்ணும் கருத்துமாகக் கட்டி வளர்த்த காவலன் - இந்துக்கல்லூரியினை வளர்த்திடும் உத்வேக அலையில் எங்களையெல்லாமிட்டுச் சென்ற வழிகாட்டி-கம்பீரக்குரலில் அழகுதமிழ் பேசி, ஓய்வுறக்கம் மறந்து பம்பரமாகச் சுழன்ற சேவையாளன்-பதவியல்ல சேவையே தேவையென வாழ்ந்த தன்னலமற்ற தொண்டன்—கடமை கண்ணியம் கடப்பாடு தவருது 'கற்ருங்கு ஒழுகிய' குணுளன் பற்குணம் மாஸ்டர் இன்று இல்லை! நினைக்கவோ நம்பவோ முடியாத விடயம்

'இந்துக்கல்லூரியே பற்குணம்-பற்குணமே இந்துக்கல்லூரி' என எல்லோரும் எடுத்துரைக்கும் வகையில் அவரின் வாழ்வு இந்துக்கல்லூரியின் சரித்திரத்துடனேயே பின்னிப் பிணைந்து விட்டது. 'இந்துக்கல்லூரி வளர்ச்சியே முதல், தன் வாழ்வு பிறகு' என்ற நிலையில் வாழ்ந்தவரைக் கண்டு 'வள்ளுவருக்கு ஒரு வாசுகி என்ருல் இந்துக்கல்லூரிக்கு ஒரு பற்குணம், என்று புகழ்பாடினேம்.

அடக்கத்தின் பெட்டகம் அந்த உத்தமன். கல்லூரியில் விழாக்களா வேறு வைபவங்களா எந்த நிகழ்ச்சியிலும் மேடையேறி மாலையேற்று புகழ் பேசாத அடக்கமானவர். வாசலில் நின்று தன்னடக்கப் புன்முறுவல் மாலைகளை வருகின்ற விருந்தினர்களுக்கு வீசி வரவேற்ற அன்பாளன் - என்றும் எங்கும் எதிலும் பின் நின்று உந்துகின்ற சக்தியாக மிளிர்ந்து மாணவமணிகளுடன் ஆசிரியப் பெருமக்களுடன் பழைய மாணவச் செல்வங்களுடன் பாடசாலை அபிவிருத்திச்சபைச் செயற்குழுவினருடன் இரண்டறக் கலந்து நின்று அலுவல்கள் பல சாதித்த சாதனையாளன் - விளம்பரம் வெறுத்து விரும்பிய முடிவு சாதித்த குணுளன்-அடங்கி ஒதுங்கி நின்று சேவைகள் பல புரிந்த சேவையாளன் - இன்று அடங்கி ஒடுங்கி அமரராகி எங்கள் இதயங்களில் தெய்வமாகிவிட்டார்.

மாலைகள் மறுத்து நின்று சேவைகள் மட்டும் புரிந்த அந்தத் தொண்டனுக்கு மாலைகள் பல போட்டு மலர்கள் குவித்து இரங்கற்பாக்கள் பாடித்தெய்வமாக இன்று போற்றுகின்ருேம். இந்துக்கல்லூரி நாற்பதாண்டு பூர்த்திக்காக பிரமுகர்களைக் கொண்டு 39 விளக்குகள் ஏற்றுவித்த பெருமகனை அவர் எதிர்பாராதவகையில் அவர்தம் திருக்கரத்தால் 40வது மங்கள விளக்கினை ஏற்றுவித்த நாங்கள் இன்று அவர் திருவுருவப்படத்திற்கு விளக்கேற்றி வைக்கின்ருேம்; ஸ்ரீ வித்தகவிநாயகருக்குத் திருக்கோயில் எழுப்பி மகாகும்பாபிஷேகம் கண்டவேளையில் அரோகராக் கோஷம் எழுப்பி மெய்சிலிர்த்த பற்குணம் மாஸ்டரை இன்று இழந்து 'ஐயோ' என அவலக் கோஷம் எழுப்பிக் கதறி நிற்கின்ருேம். – இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானம் நிரவல் செய்யப்பட்டு 'எனது பிள்ளைகள் கிரிக்கெட் விளையாட வேண்டும், என்றவர் நிரந்தர 'நித்திரையுடன்' 11-7-91ல் அதே மைதானத்திற்கு வந்து போனர்-இந்துக்கல்லூரிக்கு என்ன குந்தகம் வந்தாலும் நெருப்பாகச் சீறும் அந்தச் சீராளன் இன்று தீயுடன் சங்கமமாகிவிட்டார்.

ஆறுதல் அறியாத-ஆறிப்பொறுத்திருப்பது அறியாத-பற்குணம் மாஸ்டருக்கு இறுதி யாத்திரை - மலேசியாவில் பிறந்து பெற்ற அன்னையையும் தந்தையும் இழந்து சிறுபாலகனாக இலங்கை வந்து - தாயின் அன்னையின் அரவணைப்பில் அக்காவுடன் வளர்ந்து-வாழ்க்கையில் பல எதிர் நீச்சல்களைச் சமாளித்து-ஆசிரியனாகி - துணையதிபராக உயர்ந்து - அதிபர் பதவிக்கு ஆசைப்படாது - சேவையாளன் தொண்டன் குணசீலன் என எல்லோரும் போற்ற அமைதியாக தன் கடமையனைச் செய்து பெற்ற ஒரே செல்வத்தை மட்டுமல்ல எத்தனையோ பிள்ளைகளை வாழவைத்து-கட்டிலில் படுத்து வருந்தாது வைத்தியசாலையில் வாடாது-இறைவன் திருவடியெய்துவிட்ட பற்குணம் மாஸ்டர் நிம்மதியாக இறுதியாத்திரை செல்லப் புறப்படுகின்றார், பாடசாலை அபிவிருத்திச் சபைசார்பில் இறுதி அஞ்சலி செலுத்த, சோர்வுற்ற உள்ளத்துடன் வலுவற்ற நாவுடன் எழுந்து நின்ற சிறியேனையும் அறியாமல் வந்த வார்த்தைகள்:-

'' தன்னைச் சூழ்ந்து வாழ்பவர்களுக்காக ஓடிக்கொண்டிருந்த
நதி ஒன்று இன்று வற்றிவிட்டது.
எத்தனையோ பேர்களுக்கு அரணாக நிமிர்ந்து நின்ற
மலை ஒன்று இன்று சரிந்து விட்டது.
தன்னைச் சுற்றிலும் வாழ்ந்தவர்களுக்கு கனிகள் பல
கொடுத்துதவிய நெடு மரம் ஒன்று இன்று சாய்ந்து விட்டது.
பல்லாயிரம் மாணவர்களுக்கு அறிவொளி பரப்பி
நின்ற பல்கலைக்கழகம் ஒன்று இன்று இழுத்து மூடப்பட்டுவிட்டது. ''

ஆம். அந்தப் புனிதமனிதன் என்றும் தன்னைப்பற்றிச் சிந்தித்ததில்லை - தன்னைச் சுற்றியிருந்த மற்றவர்களைப் பற்றியே எண்ணினார் — மற்றவர்களுக்காகப் பாடுபட்டார் மற்றவர்களுக்காகவே வாழ்ந்தார் - மற்றவர்கள் தன்னைப்போல ஏனையோருக்காக-குறிப்பாக இந்துக்கல்லூரிக்காக - பணியாற்றவேண்டும் என்று எதிர்பார்த்தார் - அந்த எதிர்பார்ப்புடன் நிம்மதியாக இறுதிமூச்சையும் விட்டிருப்பார்.

''இந்துக் கல்லூரியை மேலும் வளர்க்க வேண்டும் - உயர்த்த வேண்டும்.'' என்ற உத்வேகத்துடன் வாழ்ந்த பற்குணம் மாஸ்டர் இந்துக்கல்லூரியில் பங்கு பற்றிய கடைசிக் கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்களை மறவாது, ''பாடசாலை அபிவிருத்திச் சபையும் பழையமாணவர் சங்கமும் இந்துக் கல்லூரி அதிபருடனும் ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் சேர்ந்து இந்துக்கல்லூரியை வளர்த்திட வேண்டும்'' என்பதே பொன்னான பண்புகளும் குணங்களும் சேர்ந்து பற்குணமாகப் பிறந்து வாழ்ந்து உயர்ந்து எங்கள் இதயங்களில் தெய்வமாகிவிட்டவரின் உயில் என்பதனை என்றும் நினைவுகூர்ந்து அந்த உயிலை நடைமுறைப் படுத்துவோமாக. அதுவே அமரர் பற்குணம் மாஸ்டரின் ஆத்மா சாந்தியடைய நாங்கள் செய்யும் உன்னதமான அஞ்சலியும் உறுதிமொழியுமாக இருக்கும். அதனை நாங்கள் நிறைவேற்ற ஸ்ரீ வித்தக விநாயகர் அருள்வாராக.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!

பாடசாலை அபிவிருத்திச் சபையின் சார்பில்
**கந்தையா நீலகண்டன்**
செயலாளர்

# சகோதர பாடசாலையின் உருக்கமான செய்தி

மறைந்த எங்கள் அன்பர் திரு. சு. பற்குணம் அவர்களின் நினைவு மலரிற்காக சிறு குறிப்புரையொன்றைத் தருவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்பது வள்ளுவன் வாய்மொழி. அதற்கேற்ப புகழோடு தோன்றி, புகழோடு வாழ்ந்து, புகழோடேயே மறைந்தவர் திரு. சு. பற்குணம் அவர்கள். "பற்குணம் மாஸ்டர்" என்று பற்றுதலோடு யாவராலும் அழைக்கப் பட்டவர் எங்கள் நண்பர். அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றே! கொழும்பு இந்துக் கல்லூரிக்கு ஆசிரியராக, உப அதிபராக, பதில் அதிபராகத் தன் அயராத உழைப்பைத் தந்தவர் அவர். ஓய்வும் சோம்பலும் அவரிடம் நாம் காணாதவை. ஒவ்வொரு சிறு விடயங்களிலும் பற்குணம் மாஸ்டரின் முத்திரை பதிக்கப்பட்டிருப்பதை இந்துக் கல்லூரியின் வரலாறு நமக்கு பறைசாற்றும்.

அது மட்டுமல்ல, எங்கள் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரிக்கும் அவரின் மகத்தான அறிமுகம் கிடைத்தது நம் பாக்கியமே! ஆரம்பத்தில் இந்துக் கல்லூரியுடன் இணைந்திருந்த நமது கல்லூரி, இந்துப் பெண்கள் கல்லூரியாகத் தனித்து இயங்க வேண்டும் என்ற பெரு நோக்கத்தின் அடிநாதமாக விளங்கியவர்களில் இவரும் ஒருவர். எங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பலவிதமாகவும் தனது ஆலோசனைகள வழங்கி, ஒவ்வொரு வைபவத்திலும் தவறாது கலந்து சிறப்பித்தது அவரின் பெருந்தன்மையே அல்லவா! அவர் மறைவதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னால் கூட எமது கல்லூரியின் புது மண்டபத் திறப்பு விழாவுக்குத் தமது பாரியாருடன் வருகை தந்து சிறப்பித்ததுடன், மலர்ந்த முகத்தோடு தனது மனமுவந்த பர்ராட்டுகளையும் அவர் தந்து சென்றதை நான் என்றுமே மறக்க முடியாது.

அன்பும், பண்பும், அமைதியும், ஆர்வமும் நிறைந்த எங்கள் பற்குணம் மாஸ்டரின் திடீர் மறைவு எங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கினாலும், அவரின் விலைமதிப்பில்லா சேவைகளை நன்றியோடு நினை[illegible], அவரின் ஆத்மா சாந்தியடையவும், அவரின் மனைவியார், மகன் ஆகியோர் ஆறுதல் பெறவும் இறைவனை வேண்டுகிறேன்.

**திருமதி ரு. சிவகுருநாதன்**
அதிபர்
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
கொழும்பு-4.

# ஆசிரிய சகாக்களின் அஞ்சலி

## பண்பின் சிகரம் பற்குணம் மாஸ்டர்...

கல்வித்துறையில் கடமை புரிய ஆண்டுதோறும் அனேகர் வருவர்...... போவர். ஆனால் அவர்களுள் வந்த சுவடு தெரியாமற் போவோர் பலர்...... வந்து நிலைப்பவர் சிலர்...... அந்தச் சிலருள் நம் அமரர் பற்குணம் மாஸ்டரும் ஒருவர்.

கற்பித்தற் செயற்பாடுகளுடன் தம்மை இணைத்துக்கொண்டது மட்டுமல்லாது, மாணவரின் அகவயமான தனிப்பட்ட ஆளுமைக்கும் அடித்தளமிட்டவர் அமரர்.................

அவர் பாடசாலை வளாகத்துள் ஆசிரியராய்ப் புகுந்த நாள் பொன்னாள். அன்று தொடங்கியது அமரர் பணி................பாடசாலையின் மண்ணாய்......மரமாய்....கட்டடங்களாய்......தளபாடமாய்...........மாணவராய்............ ஆசிரியராய்............நலன் விரும்பியாய்த் தன்னை இந்துக் கல்லூரியுடன் இணைத்துக்கொண்டவர். உப அதிபர் ஆசிரிய திலகம் அமரர் பற்குணம்.

இந்துக் கல்லூரி என்றால் அமரர் பற்குணம், பற்குணம் என்றால் இந்துக் கல்லூரி என்னும் அளவிற்கு அவருடைய செயற்பாடு முழுவதும் கல்லூரியைச் சுற்றியதாகவே இருந்தது. அவர் ஒரு தனி மனிதனல்ல. இந்துக் கல்லூரி என்ற ஆலமரத்தின் ஆணி வேர். அவர் இந்துக் கல்லூரியில் கற்ற மாணவரின் உள்ளங்களில் குடிகொண்ட குரு. அதனால்தான் அவர் மறைந்தாலும் அவரது மாணவரால், அவருடன் பழகிய ஆசிரியர்களால் அவரை நினைவில் நின்றும் நீக்க முடியவில்லை.

ஓய்வு பெற்றவர் சாய்மனைக்கதிரையில் அமராது மீண்டும் வெளியில் நின்று தோன்றாத் துணையான ஆசிரியராகத் திகழ்ந்தவர் அவர். அவரது ஆத்மா இந்துக் கல்லூரி. அவரது ஊன் உடம்பில் இருந்து சடுதியாக ஆத்மா பிரிந்து விட்டாலும், அவர் விட்டுச் சென்ற பணிகள் எம் கண் முன்னே நின்று அவரை நினைவூட்டும்.

அவரது ஆத்மா இந்துக் கல்லூரியின் எதிர்கால நலனுக்காக வானுலகிலிருந்து வாழ்த்திக்கொண்டேயிருக்கும்.

ஓம் சாந்தி — சாந்தி — சாந்தி.

**க. சேய்ந்தன்**
தலைவர்,
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
கொ/இந்துக் கல்லூரி.

## மறைந்த துணையதிபருக்கு இன்றைய துணையதிபர் செலுத்தும் அஞ்சலி

# ஆசிரிய உலகில் அணையா விளக்கு

"துள்ளித் திரிந்த குணம் ஒன்று
துள்ள மறந்த தேன் இன்று
மென்மையான குணம் ஒன்று
மேலுலகு சென்றதேன் இன்று"

காலதேவன் கட்டளையில் பிறப்பும் இறப்பும் இயற்கையானது, எனினும் நல்லவர்கள் வையத்துள் நீண்டநாள் வாழ்வதில்லை என்ற இலக்கணத்துக் கேற்ப இவ்வுலகை விட்டு மறைந்த எங்கள் பற்குணம் இறந்தாலும் இறவா நிலை பெற்றுள்ளார்.

அன்பு கனிந்த உள்ளம் பெருந் தன்மையுடைய உள்ளம், பிறர் உயர்வை விரும்பும் உள்ளம், கடமை கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த உள்ளம், தெய்வத்தின் இருப்பிடம் என்ற நற்பண்புகளையுடைய மனிதன் தெய்வமாகின்றான்.

"மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
வாரி வாரி வழங்கும் போது வள்ளலாகலாம்
வாழை போல தன்னைத் தந்து தியாகியாகலாம்"

என்பவற்றைத் தனது இலக்கணமாக்கி மற்றவர்களின் மதிப்பையும் மரியாதையையும் பெற்ற எங்கள் தந்தை எம்மை விட்டுப் பிரிந்து விட்டார்.

தன் துணைவிக்கு அன்புக் கணவராகவும், தனயனுக்கு நல்ல தந்தையாகவும் மாணவர்க்கு நல்லாசானாகவும் எல்லோருக்கும் அரிய நண்பராகவும் வாழ்ந்த பற்குணம் எம்மை விட்டுப் பிரிந்தது எம் இதயத்தை நெகிழ வைக்கிறது.

"எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்ற பொன் மொழிக் கேற்ப மாணவர்களுக்கு அறியாமையை அகற்றி அறிவை உதயமாக்கும் ஞானப் பணியைச் செய்தவர் இந்த நல்ல குணமாகும். இதன் மூலம் ஒரு அறிவறிந்த மக்களை உருவாக்கும் ஒரு சமூகப்பணியை இவர் ஆற்றியுள்ளார்

இந்துக் கல்லூரியின் ஆசிரிய மாணவ தேவைகளைத் தக்க சமயத்தில் இனங் கண்டு அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு அரும்பாடுபட்டவர். மாநகரிலுள்ள வர்த்தகப் பெரியார்களால் இந்துவின் விளையாட்டு மைதானத்தை ஒரு முழுமை பெற்ற அரங்காக மாற்றுவதற்கு முயற்சி செய்த பெரியவர், அவ்வேலை முடிவுற முன்னமே விண்ணுலகு சென்று விட்டார்.

இந்துக் கல்லூரியின் கலை வளர்ச்சிக்காக மன்றங்களை அமைத்து அவற்றின் மூலம் இயல், இசை, நாடகம் என்ற கலை வடிவங்களை அழிவுறாது காக்க முயன்ற ஒரு தமிழ்ப் பெரியாரின் இழப்பு எம் கல்லூரிக்குப் பெரும் இழப்பே.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"

என்ற முது மொழிக் கேற்ப இந்துக் கல்லூரியில் ஒரு விநாயகர் ஆலயத்தை அமைக்க வேண்டு மென்று அவர் கண்ட கனவு அவருடைய காலகட்டத்திலேயே முழுமை பெற்றது.

இந்துவின் வளர்ச்சிக்காக என்னென்ன கனவு கண்டாரோ அக் கனவுகளை நனவாக்க நாமும் எமது பின்னோரும் என்றென்றும் உழைப்போம்.

மாசில்லாப் பெருவாழ் வெய்திய மகான்களின் வரிசையில் பற்குணமும் ஒருவர் அன்னாரின் ஜீவாத்மா எல்லாம் வல்ல இறைவன் இணையடிகளைச் சார்ந்து நிரதிசய நித்தியானந்தப் பெருநிலை எய்த வேண்டு மென உளமாரப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

க. த. இராஜரட்ணம்
உப அதிபர்
இந்துக் கல்லூரி
கொழும்பு.

## இந்துவின் மாணவத் தலைவர்கள் செலுத்தும் வணக்கம்

# உத்தமரில் உத்தமனே

தந்தை அவர் தவமிருந்து,
அன்னை அவள் அகமகிழ்ந்து,
அவனியிலே அவணி செய்ய,
அன்புடனே பெற்றெடுத்த புதல்வனவர்.

தமிழன்னை தத்தெடுத்த தங்கமென,
பற்குணம் என்றன்றே பண்புடனே,
நற்குணமே நல்கிட்ட நவமணியாய்,
உயர்ந்திட்டார் உலகினிலே உத்தமராய்.

தாய்மொழியாம் தமிழ் அதனை,
தாயெனவே தாழ்மையுடன் தாங்கிட்டு,
தமிழனவன் தலைநிமிர்ந்து வாழ்ந்திடவே,
அர்ப்பணித்தார் தன்னையவர் இந்துவிலே.

கடமைதனை உயிரெனவே மதித்திட்டு,
கனிவுடனே கண்ணியமாய் கற்பித்தார்.
பிழையதனை பிழையெனவே பிரம்புதனை எடுத்திட்டார்.
தவப்பேரும் தந்தையென தன்வழியே நடந்திட்டார்.

கல்லூரி கலைவளர கண்கூடாய் உழைத்திட்டார்.
வயததனை வயலெனவே வன்மையாய் உழுதிட்டு,
களைப்பறியா காளையென கண்ணெதிரே உழைத்திட்டார்.
உத்தமரில் உத்தமனே! என்ற பெயர் பெற்றிட்டார்.

<u>ஆனால்</u>

தவமனைவி தனைக்காத்த கணவனாய்,
தன்தனயன் தரம்காத்த தந்தையாய்,
தமிழரவர் தலைநிமிர தனயனாய்,
நீயிருந்தது போதுமென்றே பாசக்கயிறும் வந்ததன்றே.

கம்பீர தோற்றமது கற்பூரமென கரைந்திடினும்,
கனிமொழியும், கடுமொழியும் பெண்கற்பெனவே நிலைதிடுமே.
செய்யவிருந்த சேவையது 'செல்'லெனவே சிதறிடினும்,
செய்திட்ட சேவையது செம்மையாய் நிலைத்திடுமே.

காயமிது பொய்யெனவும், காற்றடைத்த பையெனவும்,
கண்ண தாசனவன் கூறிட்டான்.
ஆழமான ஆத்மாவோ அசையாது நின்றிடுமே,
என்றன்றே கண்ணனவன் கூறிட்டான்.

நிலையற்ற நிலவுலகில், நிலையிதென எண்ணாதீர்
நிலையான ஆத்மாவோ நின்னருளால் நிலைத்திடுமே.
என்ற தேதி கேட்டிட்டு அர்ச்சுனனும் தெளித்திட்டான்
இந்தசேதி கேட்டிட்டோம், கவலையதை களைந்திடுவோம்,
மனசாந்தியடைவோம்.

இந்துக் கல்லூரி
கொழும்பு - 04.
02-08-1991

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
மாணவத்தலைவர்கள்

**தமிழ் போற்றிய பெருமகனைத் தமிழ் மன்றத்தினர் போற்றுகின்றனர்**

# இந்துவின் இளம் தமிழ் நெஞ்சங்களாம் தமிழ் மன்றத்தின் கண்ணீர் அஞ்சலி

" தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர் "

என்ற பாரதியின் வாக்கே தன்வாக்காகக் கொண்டு தமிழுக்கும், சமயத்திற்கும் அரும் பணி புரிந்த எங்கள் பற்குணம் ஆசிரியரே, தங்கள் பிரிவு எமக்குமட்டுமல்ல தமிழ் பேசும் நல்லுலகத்திற்கே ஓர் பேரிழப்பாகும். தமது முதிய வயதிலும் எம்மைச்சுற்றி சிட்டுக்குருவி போல பறந்து திரிந்த பற்குணம் ஆசிரியரின் உருவம் இன்னமும் எங்கள் கண்முன்னே நிற்கின்றதே ஐயகோ! அவரின் இழப்பை இன்னமும் ஜீரணிக்க முடியவில்லையே.

இடையில் நாலுமுழ வேட்டி வெண்நிற மேலங்கியும் கையில் பிரம்புடனுமான ஓர் எளிமையான தோற்றமும் ஏறு போன்ற நடையும் உடையவர் தாம் எங்கள் பற்குணம் ஆசிரியர் எமது கலாச்சாரத்திற்காக எமது கலாச்சாரம் வளர உழைத்தவரான பற்குணம் ஆசிரியர். இன்று எம்மத்தியில் இல்லையே. இந்துவின் இரண்டாயிரம் மாணவர்களின் முகங்களையும் ஏன் அவர்களின் பெயர்களைக் கூட மனப்பாடமாக வைத்திருக்கும் ஓர் அருமையான எளிமையான அன்பான ஆசிரியரை இனி யாம் என்று காணப்போகின்றோம்.

" இன்னா செய்தாரை ஒருத்தல் அவர் — நாண
நன்நயம் செய்துவிடல் "

என்ற வள்ளுவரின் வாக்கின்படி நடந்து தமக்கு தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்தவர் எங்கள் பற்குணம் ஆசிரியர், கொழும்பு மா நகரிலே பற்குணம் மாஸ்டரை தெரியாதவர்களே இல்லை என்று கூறலாம், 'அடிக்கின்ற கைதான் அணைக்கும்' என்ற பாடல் வரிகளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த நல்ல மனிதர் எங்கள் மாஸ்டர். அவர் இந்துவுக்கு காலடி எடுத்துவைத்த நாள் முதல் தமக்கு நோய் துன்பம் என்று கூடபாராமல் இந்துவின் முன்னேற்றத்திற்காக உழைத்தார். இந்துவின் வாழ்நாள் முழுவதும் இந்த நற்குணத் தானை மறவாமல் இருக்க நீங்காத இடம்பிடித்து எங்களை கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கடித்து இறைவனிடம் சென்று விட்டீரே,

உங்களை எண்ணியே வாழ்கின்றோம் மாஸ்டரே !
உங்களை எண்ணினால் கண்களில் கண்ணீர் வெள்ளம் !
31 நாள் சென்றினும் ஆறிடுமோ எம்மனம் !
இந்துவின் நீண்ட நினைவில் நீங்கிடுமோ உம்உருவம் !

இந்துவின் இதயத்தில் நீங்காத இடம் பிடித்த எங்கள்
மாஸ்டரே உமக்கு சமர்பணம் ஐயா.

இந்துவின் இளையவருக்கு இனிய தமிழ் மாமன்றத்தினரின் இதயங்களில் இருந்து சொட்டும் இரத்தத்தையே கண்ணீர் அஞ்சலியாக்கி அவர்தம் பாதக் கமலங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

துன்பத்துடன்

**இந்துவின் தமிழ் மன்றம்**

சமயம் வளர்த்தவருக்குச் சமயம் வளர்க்கும் மாணவ மன்றம் செலுத்தும் அஞ்சலி

# இந்துக் கல்லூரியின் இளையவராம் இந்து மன்றத்தினரின்

# கண்ணீர் அஞ்சலி

''தோன்றிற் புகழொடு தோன்றுக—அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.''

எனும் வள்ளுவர் வாக்கிற்கு ஒப்ப அழியாப் புகழோடு தோன்றி மறைந்த எங்கள் குருவுக்கு கண்ணீர் நிறைந்த எங்கள் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம். அவர் உடல் எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவர் ஆற்றிய தொண்டு, சலிக்காத சேவை, பண்பு நிறைந்த கடமை உணர்வுகளுடன் கூடிய அவர் புகழுடம்பு எங்கள் நினைவை விட்டு என்றும் அகலாது, பசுமரத்தாணி போல் எமக்கு அவர் வழங்கிய அறிவுரைகளும், நல்லுரைகளும் எம் நெஞ்சத்தில் ஆழப்பதிந்து விட்டது. காலன் அவர் உயிரை எங்களிடம் இருந்து பிரித்தாலும் அவரைச் சுற்றிய பசுமையான நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் இருந்து யாராலும் அகற்ற முடியாது.

சிற்றெறும்பின் சுறுசுறுப்பும், கட்டெறும்பின் கடுகடுப்பும், மின்னல் வேகமும் கம்பீர நடையும் கொண்ட பற்குணம் ஆசிரியர் இன்னமும் எங்கள் பாடசாலையில் வளைய வருவது போன்றதொரு உணர்ச்சி எங்களை வாட்டுகின்றது. மீண்டும் அந்த கம்பீரத் தோற்றத்தை எப்போ காணப் போகின்றோம். சமயக்குரவர்கள் தோன்றிய வழியில் வந்த சமயத் தென்றலான நம் பற்குணம் ஆசிரியர் எங்கள் கலாச்சாரம் வளர சமயத் தொண்டு செய்கின்ற திருப்பணியே தனது பணியாக ஏற்று இன்று வித்தக விநாயகரின் பாதங்களையே சரணாகதி என அடைந்து விட்டார்.

கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்று பாடம் சொல்லித் தந்த எங்கள் குரு-எம்மையும் அவர் குடும்பத்தாரையும் மீளாத் துயர் எனும் கடலில் மூழ்க வைத்து விட்டு பற்குணம் எனும் படகு-கரையேறி விட்டது. துடுப்பிழந்த எங்களுக்கும் அவர் குடும்பத்தாருக்கும் இனி யார் துணை?

வாழ்க அவர் தம் தொண்டு!
வளர்க அவர் தம் பணிகள்!!
அடைக அவர் தம் ஆத்மா சாந்தி!!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கண்ணீருடன்

இந்து மன்றம்
கொழும்பு இந்துக் கல்லூரி

## ஓர் அருமை நண்பனின் இறுதி அஞ்சலி

# இந்து கண்ட நல் ஆசிரியன்

'' எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவான் ''
''தாரமும் குருவும் தலை விதிப்படி'

'ஒரு நாட்டை வழி நடத்திச் செல்லும் எதிர்கால சிற்பிகளை உருவாக்கும் திறமை ஆசிரியர்களிடமே உண்டு.

'' மாதா, பிதா, குரு, தெய்வம்'' என்பது நம் முன்னோரது கூற்றாகும். எம்பெற்றோருக்கு அடுத்ததாக அந்தஸ்தினை பெற்ற ஆசிரியர்கள் இறைவனாக மதிக்கப் பட வேண்டியவர்கள். கல்விச்சாலைகள் நிறுவி அறிவுத் செல்வத்தினை ஏழை மாணவர்களுக்கு கொடுப்பதே மிகவும் சிறந்ததர்மம். அந்தவார்த்தைக்கு மதிப்பு கொடுத்து இயங்க வேண்டியது. ஆசிரியர் கடமை ''உன் கடன் அடியேனையும் தாங்குதல் என் கடன் பணி செய்து கிடப்பதே '' என்பது அப்பர் பெருமானது வாக்கு, அந்த வாக்கினை தாரகமந்திரமாகக் கொண்டு செயற் பட்டவர். சிறந்த சேவையில் பூரண வெற்றிகண்டவர். அண்மையில் காலஞ்சென்ற உயர்திரு. சு. பற்குணம் மாஸ்டர் அவர்கள் மாணவர்களை அறிவிலும், ஆற்றலிலும், பண்பிலும், ஒழுக்கத்திலும், வீரத்திலும், சிறந்து விளங்க வைத்து, தானும் இன்பம் கண்டு இந்துவிற்கும் பெருமை மண்ணிற்கும் தேடித்தந்தவர்.

இவர் யாழ்/மல்லாகத்தை பிறப்பிடமாக கொண்ட உயர்வேளாண் மரபில் உதித்த திரு. சுப்பிரமணியம், திருமதி. சு. தில்லைமுத்து இவர்களுக்கு அருமைப் புதல்வனாக 2-6-1929 ஆம் ஆண்டு உதித்தவர் இவருடன் உடன்பிறந்த ஏகசகோதரி திருமதி புஸ்பம் செல்வத்துரை ஆவர். பற்குணம் மாஸ்ரர் அவர்கள் மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் ஆரம்ப கல்வியை கற்றவர் சொந்தமுயற்சியால் வளர்ச்சியடைந்து 1951 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையை ஆரம்பித்தார். பயிற்சி பெற்றபின் தான் படித்த பாடசாலையில், பத்து வருடங்கள், சேவையாற்றி, தான் பிறந்த மண்ணிற்கும் பெருமை தேடித்தந்தவர்.

அவர்தனக்கென குறிக்கோள் ஒன்றினை அமைத்து அதன்படி வாழ்ந்து காட்டும் நோக்குடன் யாழ் வடமராட்சி, வல்வெட்டியை பிறப்பிடமாகக் கொண்ட, திரு, கந்தையா அவர்களுக்கும், கரணவாயை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. அன்னம்மா அவர்களுக்கும், பிறந்த மூன்றாவது அருமை மகளை, பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியையை இல்வாழ்க்கைத் துணைவியாக 20-1-1961ல் பெற்று மகிழ்ந்தவர். இவர்கள் செய்த தவப்பயனின் சிகரமாக, 1963 ஆம் ஆண்டில் முருகதாஸ் என்னும் ஏகபுதல்வரை பெற்று மகிழ்ந்தவர். மகனின் ஆரம்பக்கல்வியை எமது இந்துவில் ஆரம்பித்து க, பொ. த. உயர்தர வகுப்புவரை சிறப்புடன் பயிற்றுவித்து, கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் சித்திபெறச் செய்து, தாய், தந்தையர், மட்டுமன்றி ஏனையோரும் பயன் அடையும் வண்ணம் செய்தவர்,

திரு. பற்குணம் மாஸ்டர் அவர்கள் 1966 ஆம் ஆண்டு, எமது இந்துக் கல்லூரிக்கு சிறப்பு ஆசிரியராக ஆண்டவனால் நியமிக்கப்பட்டவர். எமது கல்லூரியில் தனது சேவையை ஆரம்பித்த சிறிது காலத்தில் நான்காந்தர அதிபராக பதவி உயர்வு பெற்று கொ/மகாவத்தை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில், சிறிது காலம் சேவையாற்றினார். அதன்பின் சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்கு இந்துக் கல்லூரிதான் தகுந்த இடம் எனக் கருத்திற் கொண்டமையால் மீண்டும் இந்துக் கல்லூரிக்கே திரும்பிவந்தார்.

பொறுப்புணர்ச்சியும், திறமும், அறிவும், ஆற்றலும் ஒழுக்கமும், கொண்டவராக சிறந்து விளங்கிய பற்குணம் மாஸ்டர் இரண்டாந்தர விசேஷட பதவி (Grade II Special Post) உயர்வு பெற்று எமது இந்துவுக்கு உதவி அதிபராக பதவி ஏற்றார். இவரின்துணைவியாகும் எமத இந்துவுவிலேயே ஆசிரியையாக பதவி ஏற்றது குறிப்பிடத்தக்கது. மாஸ்டர் அவர்கள் எடுத்த காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றும் திறமை உள்ளவராகத்

திகழ்ந்தார். 1983 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலவரத்தின் காரணமாக, இந்து மாணவர் வரவில் வீழ்ச்சிகண்டது. எமது கல்லூரி அகதிகள் முகாமாக இயங்கிய காரணத்தினல், சுமார் 700 மாணவர்களேயும், 27 ஆசிரியர்களேயும் அயலில் உள்ள R. C. T. M. School பாடசாலேயில் பகுதிநேர வகுப்புகளே நடத்தி சாதனே நிலேநாட்டியவர்.

மீண்டும் எமது கல்லூரியை இயங்கவைத்து உயர் நிலேக்கு கொண்டுவர அரும்பாடு பட்டவர். நிர்வாக திறன் படைத்த இவர் எமது கல்லூரிக்குத் தேவைப்பட்ட விஸ்தரிப்பு நிலத்தைப் பெறுவதற்கும் அரும்பாடுபட்டவர்களுள் முக்கிய பங்கினேவகித்தவர்.

இந்துவில் மிளிர்கின்ற கட்டிடங்கள் அனேத்திலும் உள்ள தூண்கள் பற்குணம் மாஸ்டரைப்பற்றி கதை கதையாகச் சொல்லும், செங்கற்கள் அவரின் நாதத்தையே ஒலிக்கும். அதுமட்டும் அல்ல ஆய்வு கூடங்கள் புத்தகசாலே, விளேயாட்டுமைதானம், பார்வையாளர் அரங்கு, ஆராதனே மண்டபம், இவைகள் அனேத்தும் திறம்பட மிளிர்வதற்கு அரும்பாடு பட்ட செயல் வீரன் இவர்.

இவர் 1985 ஆம் ஆண்டில் எமது கல்லூரியில் பதில் அதிபராகவும் கடமையாற்றினர். அதிபர் பதவி இவரைத் தேடி, நாடியபோதும், ஏற்கமறுத்து நிர்வாகத்திற்கு தூண்டு கோலாகத் திகழ்ந்தார். அவரின் அருவணேப்பினுல பிரிந்து சென்றமாணவர்களும், புதிய மாணவர்களுமாக பலர் மீண்டும் சேர்ந்து கொண்டனர். இதனல் நிறைவுள்ள பாடசாலே யாக இந்துவை உயர்த்திய பெருமை அவருக்கே உரியதென்றால் மிகையாகாது.

திரு. பற்குணம் மாஸ்டர் 1988 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினுல் முதலாம்தர அதிபர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். கடமையையே கண்ணுகக்கருதிய பற்குணம் மாஸ்டர் தனக்குக் கிடைத்த பதவி உயர்வையும் பொருட்படுத்தாது எமது கல்லூரியிலேயே தொடர்ந்தும் உதவி அதிபராகக் கடமையாற்றினர். பல விசேட தகைமைகளேப் பெற்ற வர். தனது பயிற்றப்பட்ட ஆசிரியப் பத்திரத்தோடு ஆசிரிய ஆலேசாக பரீட்சையிலும் சித்தி அடைந்ததும் சிறப்பு அம்சமாகும். (Teacher Counseilor's Exam)

கல்வி ஒழுக்கம், இறைபக்தி, விளேயாட்டுத்துறை இவைகளில் எம் மாணவர்களே சிறப்புறச் செய்து பாராட்டுப் பத்திரங்களும், தங்கப்பதக்கங்களும், பெறச் செய்து மகிழ்ச்சிகண்டவர். முக்கியமாக ஐந்தாம் வருட மாணவர்கள் திறமைச்சித்திகளேப் பெற்று எமது பாடசாலேக்கு பெயரீட்டித் தர முன்னின்று உழைத்தவர். மாணவர்களே ஐந்தி லேயே வளேக்கமுயன்று வெற்றியும் கண்டவர். எமது கல்லூரியின் பல்வேறு கடமை களே ஒருவராக நின்று செய்து முடிக்கும் திறமை இவரிடம் குடிகொண்டு இருந்தது. இவரை ஒரு மனித நிறுவனம் என குறிப்பிடுவதில் பெருமை அடைகிருேம்,

எமது கல்லூரி மேடைகளில் இவர் ஏறினுற்போதும், மாணவர்களது கைதட்டல் விண்ணேப் பிளக்கும், அளவிலதாக இருக்கும். இவர் பேசுவதில் சமத்தர். அதிலும் கேட்பவரை தன்பக்கம் கவரும், விதத்தில் பேசுவதில் வல்லவர். எமது பாடசாலேயில் எந்தக் கருமமானுலும், இவர்தான் முன்னின்று நடாத்திவைப்பார். விளேயாட்டுப் போட்டி களில் மாணவர்களுடன் ஒன்றிணேந்து பம்பரம்போல் தோற்றமளிப்பவர், விழாவாக இருந் தால் இவர்தான் கதாநாயகன்.

திரு, பற்குணம் மாஸ்டரின் பாடசாலேக் கருமத்தில் தலே சிறந்ததாகவும் என்றும் நினேவுச் சின்னமாகவும் திகழ்வது "ஸ்ரீ வித்தகவிநாயகர் கோவிற்பணியாகும்." இக் கோயிலின் அடிக்கலே நாட்டுவது முதல் அதன் வேலேகளே குறுகிய காலத்தில் இரவு பகலாக கூட நின்று செய்வித்த பெருமை இவருக்கே உரியதாகும். கோவிலுக்கு மண்ட பம் அவசியம் என உணர்ந்து, அதனேயும் தன் பதவிக்காலத்தில் செய்து முடிக்க உறுதி யாக நின்று கொடைவள்ளல்களின் உதவியைப் பெற்று நிறைவேற்றிய பெருமை இவ ருக்கே உரியதாகும். பாடசாலே அபிவிருத்தி சங்கத்தினராகிய எங்களே தன் தோழர் களாக மதித்து உறங்கவிடமாட்டார். ஓய்ந்திருக்கும் பம்பரத்திற்கு அடிக்கடி சாவி கொடுத்து சுழலவிடுவதுபோல எம்மை யெல்லாம் இயக்கி வழிநடத்திய மகாவீரர்.

திரு, பற்குணம் மாஸ்டரின் நற்குணம் இந்துவில் நீண்டகாலமாக பிரகாசித்ததை யாவரும் அறிவர் தனக்கென உரித்தான வெண்மை ஆடை, வீரநடை, கெம்பீரமானதோற்றம், புன்சிரிப்பு, இத்தனை சிறப்பு அம்சங்களை கொண்டவர். எமது மாணவச் செல்வங்களின் நல் ஆசிரியராகவும், தந்தையாகவும், திகழ்ந்தார். சக ஆசிரிய, ஆசிரியைமார்களுக்கும் நன்மதிப் புக் கொடுத்து, நண்பராக மட்டுமன்றி நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்.

பெற்றோர்கள் நலன்விரும்பிகளை, கொடைவள்ளல்களையும் பற்குணம், பெற்ற நற்குணத் தால், அரவணைத்து, அவர்களின் அன்பையும், ஆதரவையும் எமது கல்லூரியுடன் நிரந்தரமாக இணைத்து வைத்த பெருமை அவரையே சாரும். பற்குணம் மாஸ்டர் என பலராலும் செல்வமாக அன்போடு அழைக்கப்பட்டார். தான் ஏற்ற பணியினை செல்வனே செய்து முடித்த பூரிப்பில் ஆசிரியர் சேவையில் இருந்து 21-6-1989 ஆம் ஆண்டு இளைப் பாறினர். அன்னர் சேவையில் இருக்கும்போது எமது பாடசாலையில் படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறிய மாணவர்களை ஒன்றுசேர்த்து ''பழைய மாணவர் சங்கம்'' அமைக் கச் செய்து எமது கல்லூரிக்கு பல துறைகளிலும், நிரந்தர உதவியாளர்ராகப் பணியாற் றச் செய்த பெருமை திரு. பற்குணம் மாஸ்டர் அவர்களையே சாரும், அன்னரின் ஆசிரியசேவை நலனைப் பாராட்டி, எமது பாடசாலை அபிவிருத்திச் சபையும், ஆசிரியர் கழகமும், பழையமாணவர் சங்கமும், ஒன்றிணைந்து 1990-2-9 ஆம் திகதியில் சரஸ்வதி மண்டபத்தில் பெருவிழா எடுத்தது, வாழ்த்து மடல்களும், பரிசில்களும் வழங்கி பொன் ஆடையும் போர்த்து கௌரவிக்கப்பட்டார், அன்றைய தினத்தில் இருந்து இவரின் சேவை இந்துவுக்கு முக்கியம் எனக் கருதிய பாடசாலை அபிவிருத்தி சபையினர் அவரை ஓர் நலன் விரும்பியாக சபையில் சேர்த்து, உபதலைவர் பதவியும் கொடுக்கப்பட்டார். இறுதிமூச்சுவரை தனது சேவையை திறம்பட நிறைவேற்றியவர்.

எமது கல்லூரி 1976 ஆம் ஆண்டு வெள்ளிவிழா கொண்டாடியபோது 500 பேர்களைக் கொண்ட நலன்விரும்பிகளையும் கொடைவள்ளர்களையும் ஒன்றுசேர்த்து விழாவினை சிறப் பாக கொண்டாடி வெள்ளிவிழா மலராய் வெளியிட்டு அவர்களுக்கு இராப்போசனமும் வழங்கி கௌரவித்தது. இவ்வைபவத்தில் திரு, பற்குணம் மாஸ்டர் முக்கிய பங்கினை வகித் தது குறிப்பிடத்தக்கது. எமது கல்லூரி 1991 ஆம் ஆண்டு 40 ஆவது ஆண்டு நிறைவை எதியதையிட்டு பெருமகிழ்ச்சி கொண்ட இவர் இந்துவின் வளர்ச்சிக்கு அரிய பல திட்டங் களை எம்முடன் இணைந்து வகுத்தார். செயல்வீரரான இவர் 40 பிரமுகர்களை அன்புடன் அழைக்கச் செய்தும் ஸ்ரீ வித்தகவிநாயகருக்கு சங்காபிஷேகம், விஷேட பூசையும் செய்வித்து 40 தீபங்களை ஏற்றச் செய்து 40 ஆண்டு விழாவின் முதல் கட்டத்தினை ஆரம்பிக்க பெரி தும் பாடுபட்டவர். நலன் விரும்பிகள், கொடைவள்ளல்களை ஆதரவு நல்கி, அரவணைக்கச் சென்றபோது பாடசாலை அபிவிருத்திச் சபை செயற்குழு உறுப்பினராகிய எங்களையும், தனது துணைக்கு கூட்டிச் சென்று, ஓட்டமும், நடையுமாக குறுகியகாலத்தில் நான்கு இலச் சம் ரூபாவுக்கு மேல் சேர்த்து வங்கிக் கணக்கில் இடச் செய்த பெருமை பற்குணம் மாஸ்ட ரையே சாரும், 40 வருட பூர்த்தி விழாவிற்கு சிறப்பு மலர் வெளியிடுவதற்கும், மாணவர் மத்தியில் பல போட்டிகள் வைத்து மாணவர்களை ஊக்குவிக்க எண்ணி பல திட்டங்களை ஆரம்பித்து வைத்துள்ளார். இவரே அதனுக்குப் பொறுப்பாக இயங்குவதற்கு முன்வந்தார்.

இக்காலகட்டத்தில் பல சிறப்புத் திட்டங்களை தீட்டி, செயற்படச் செய்து, நிர்வாகத் தில் ஏற்பட்ட தடங்கல்களை நிறைவுபெறச் செய்து, புதிய கட்டிடம், விளையாட்டு மைதானம். என்னும் வேலைத்திட்டங்களை, இவர் சேவைக்காலத்திலேயே ஆரம்பித்துவைக்கப்பட்டன. எமது பாடசாலையைத்தேசிய பாடசாலைத் தரத்திற்கு உயர்த்தும்நோக்கத்துடன் எமது செயற் குழுவுடன் இணைந்து சென்று, கல்வி அதிகாரிகளுடனும், கல்வி மந்திரி அம்மையார் உயர் கல்வி மந்திரிமார்களுடனும், நேரில் விண்ணப்பம் கொடுத்த செயலவீரர் ஆவர்.

இறைபணியும், சமூகத் தொண்டும். ஒருங்கே அமைந்த மனித நிறுவனமான உயர் திரு. சு. பற்குணம் அவர்கள், எம்மையெல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு 9-7-1991 அன்று இறைவன் அடிசேர்ந்துவிட்டார். இச் செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அடியற்ற மரம்போலானோம். இவர் இறுதி மூச்சுவரை தமிழ் சமுதாயத்திற்கும், இந்துக் கல்லூரிக்குமாகப் பாடுபட்டவர். எவரும் எதிர்பாராத வேளையில் எம்மைவிட்டு பிரிந்துள்ளார். அவரின் குடும்பத்தினருக்கு எமது இதயபூர்வமான அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம். அவருடன் ஒன்றிணைந்து சேவையாற்றிய பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற் குழு உறுப்பினர் நாங்கள் துடுப்பை இழந்தவள்ளம்போல் தத்தளிக்கிறோம். தவிக்கிறோம் அன்னாரின் புகழ் உடம்பு, இறுதி ஊர்வலத்தின்போது பாடசாலையில், ஆசிரியர் மாணவர்களின் அஞ்சலிக்காக பார்வையாளர் அரங்கில் வைக்கப்பட்டது. அன்று அனைவரும் செய்வதறியாது கதறி அழுதனர். நன்றியுடன் தமது இறுதி அஞ்சலியையும் செலுத்தினர். 11-7-1991 அன்று அன்னாரின் புகழ் உடம்பு அக்கினியுடன் சங்கமம் ஆகிற்று,

இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சபையினராகிய நாம் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம். அன்னார் விட்டுச் சென்ற அரும்பணிகளை நிறைவு செய்து, எமது கல்லூரியை உயர்தர கல்லூரியாக திகழவைப்பதற்கு எம்மால் ஆன முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இந்துவின் ஆரம்ப கால மாணவர்களுள் ஒருவராகிய நான், திரு. பற்குணம் மாஸ்டருடன் நீண்டகாலமாக நெருங்கிப் பழகிய அன்பின் நிமிர்த்தம் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சபை செயற்குழு உறுப்பினராக, நீண்டகாலம் சேவையாற்றிய ரீதியில் எம்மை விட்டு பிரிந்த திரு. பற்குணம் மாஸ்டருக்கு, கண்ணீர் அஞ்சலியை செலுத்தும் இவ் அரிய வாய்ப்பினைதந்த பழைய மாணவர் சங்க செயற் குழு உறுப்பினர்களுக்கும், ஏனையோருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

அன்பால் அறிவால் பண்பால் உயர்ந்து பல ஆண்டுகள் எங்கள் கல்லூரியில் வளர்ச்சியில் ஒன்றிணைந்த உயர்திரு. பற்குணம் மாஸ்டர் 62 வருடங்கள் இவ்பூவுலகில் எம்முடன் வாழ்ந்து இறைவனுடைய பாதாரவிந்தங்களை சென்று அடைந்துவிட்டார். அன்னாருடைய ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ வித்தக விநாயகர் தாழ்பணிந்து பிராத்திப்போமாக.

''ஓம் சாந்தி'' ''சாந்தி'' ''சாந்தி''

**தி. கனகலிங்கம்**

பாடசாலை அபிவிருத்திச் சபை செயற்குழு உறுப்பினர்
முன்னைநாள் தலைவர், பழைய மாணவர் சங்கம்
இந்துக் கல்லூரி, கொழும்பு.

# பற்குணம் மாஸ்டர் அறநிதியம்

இந்துக் கல்லூரிக்கே தன் வாழ்வை அர்ப்பணித்த எங்கள் குரு பற்குணம் மாஸ்டரின் பெயரினுல் ஓர் அறநிதியத்தை ஆரம்பிக்கிருேம். இந்த அறநிதியத்தின் நோக்கம்

(அ) பற்குணம் மாஸ்டரின் நினைவாக ஒரு புலமைப் பரிசில் திட்டத்தை ஆரம்பித்து பாடசாலை அபிவிருத்திச் சபையின் கீழ் அதிபர் தலைமையில் இயங்கும் புலமைப் பரிசில் குழு மூலம் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்குதல்

(ஆ) பற்குணம் மாஸ்டர் நினைவாக இந்துக் கல்லூரி விளையாட்டுத்துறை வீரர்களுக்கு கேடயங்களும் கிண்ணங்களும் வழங்குதல்

(இ) பற்குணம் மாஸ்டரின் நினைவாக ஒரு கட்டிடத்தை இந்துக் கல்லூரியில் நிறுவுதல்

இந்துக் கல்லூரிக்காக வாழ்ந்தவரின் நினைவு என்றும் நிலைக்க நிதி உதவி தாரீர்.

**பழைய மாணவர் சங்கம்**

---

பொருளாளர்
**பழைய மாணவர் சங்கம்**
**இந்துக் கல்லூரி**
**இல. 77, லோரன்ஸ் வீதி,**
கொழும்பு-4.

அன்புடையீர்!

## பற்குணம் மாஸ்டர் அறநிதியம்

இந் நிதியத்திற்கு என் நன் கொடையாக ரூபா............................................ காசோலையாக/மணிஓடராக அனுப்பிவைக்கிருேம்.

இப்படிக்கு

ஒப்பம்

திகதி..............................199

பெயர்

தொலைபேசி :

விலாசம்

# Patkunam Master Trust

We are inaugurating a Trust in the name of our Guru Patkunam Master who dedicated his life to Hindu College. The objects of this Trust are inter alia

(a) To start a Scholarship Scheme in memory of Patkunam Master to offer Scholarships to Students of Hindu College through the Scholarship Committee of the S. D. S. under the Chairmanship of the Principal.

(b) To give Shields and Cups to Sportsmen of Hindu College in the memory of Patkunam Master

(c) To construct a building in the name of Patkunam Master at Hindu College.

Please contribute to always cherish the memory of our guru who lived for Hindu College.

**OLD BOYS' ASSOCIATION**

The Treasurer,
**Old Boys' Association**
**Hindu College**
77, Lorenz Road,
Colombo-4.

Dear Sir,

## *PATKUNAM MASTER TRUST*

I am sending herewith a cheque/money order for Rs.......................... being my contribution to this Trust.

Yours faithfully

*Signature*:..............................................................................

*Date*.............................*199* . *Name* : ..............................................................................

*Telephone* : *Address* : ..............................................................................

# அமரர் பற்குணம் அவர்கள் வாழ்வில்...

